Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU



யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

(C/638)

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 206




## சாய்பாபா முத்தி அடைந்தார் உலகு தழுவிய சோகம்

### செய்தி கேட்டு அதிர்ச்சியில் இருவர் மரணம்

(ஆந்திரா)

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு புட்டபர்த்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆன்மீக குருவான பகவான் சத்ய சாய்பாபா தனது 85 ஆவது வயதில்நேற்று காலை சிகிச்சை பலனளிக்காமல் மரணம் அடைந்தார். இவரின் மரணத்தை கேள்வியுற்ற இருவர் அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளனர்.

இவரது மறைவு துயரச்செய்தி கேட்டு உலகம முழுவதும் உள்ள பாபாவின் பக்தர்கள் இலட்சக்கணக்கானவர்கள் புட்டபர்த்தி ஆசிரமம் நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர். ஆந்திர மாநிலத்தில் அனைத்து செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த அதிர்ச்சி செய்தி கேட்டு புட்டபர்த்தியில் 2 பேர் மரணம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அங்கு பதற்றமான சூழ்நிலை காணப்படுவதால் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்காசியாவில் 'சைபர்' தாக்குதல்

### தலையைக் குடையும் சிக்கல்

(கொழும்பு)

இணையம் மற்றும் கணினி மூலம் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது குறித்து தெற்காசிய பிராந்திய வலய நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால், சைபர் குற்றச் செயல்கள் தடுப்பு தொடர்பிலான விசேட கருத்தரங்கொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கொழும்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்களில் தெற்காசிய பிராந்தய வலய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.வுக்கு எதிராக இராஜதந்திர யுத்தம்

## இந்தியாவுடன் இணைந்து வியூகம்

(கொழும்பு)

**நிபுணர் குழுவின் அறிக்கையின் போர்வைக்குள் இருந்து ஐக்கிய நாடுகள் சபையினால் கொடுக்கப்படும் அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கவும், ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கெதிராக இராஜதந்திர யுத்தம் ஒன்றை மேற்கொள்ளவும் அரசு முழுமையாகத் தன்னைத் தயார்படுத்தி வருகின்றது.**

இந்த இராஜதந்திர யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் சபையை துணிச்சலுடன் எதிர்கொள்வதற்காக இந்தியாவிடமிருந்தும் இராஜதந்திர ரீதியிலான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையில் ஏற்கனவே பல தடவைகள் தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து ஐ.நா.வின் அழுத்தத்திலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்குத் தேவையான மிகவும் பொருத்தமான பொறிமுறை ஒன்றை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு அதிகரிக்கிறது ஆதரவு

### 'வீட்டோ' அம்பு பாயும்

(கொழும்பு)

இலங்கை தொடர்பான ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை மீது ஐக்கிய நாடுகள் சபை எடுக்கவிருப்பதாகக் கூறப்படும் நடவடிக்கைகளுக்கெதிராகவும், இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவும் செயற்பட மேலும் சில நாடுகள் முன்வந்திருக்கின்றன.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கெதிராக பாதுகாப்புச் சபையின் நான்கு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அவற்றில் வீட்டோ அதிகாரமுள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொய்யாத்தோட்டத்தில் வாள்வெட்டு; நான்கு பேர் படுகாயமடைந்தனர்

### அயல் வீட்டுப் பகை விளைவித்த விபரீதம்

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளி - கொய்யாத்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அயலவர்களுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் இன்பநாதன் கபிரியேல்பிள்ளை (வயது 39), இன்பநாதன் ஜெயசுதா (வயது 33), அந்தோனிப்பிள்ளை அமுதசீலி (வயது 55), அந்தோனிப்பிள்ளை ஜெனிஸ்ரன் (வயது 24) ஆகியோரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாண பொலிஸார், இவர்கள் மீது தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, யாழ். ஆனைகோட்டைப் பகுதியில் இளைஞர் ஒருவர் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு சட்ட உதவிகள்; களமிறங்கும் வெளிநாட்டு எம்.பி.கள்



(கொழும்பு)

சரத் பொன்சேகாவுக்கு சட்ட உதவி வழங்கும் திட்டம் ஒன்றுடன் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

சரத் பொன்சேகாவின் வழக்குகள் தொடர்பான விவரங்களை ஆராயவே இந்த பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை வரவுள்ளது.

அண்மையில் பனாமாவில் நடைபெற்ற சர்வதேசப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சரத் பொன்சேகா விவகாரம் குறித்த முறைப்பாடொன்றைச் செய்திருந்தனர்.

இதன் பிரகாரம் பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்து சரத் பொன்சேகாவின் வழக்குகள் மற்றும் அதற்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகள் என்பன குறித்து ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## விழிப்புடன் செயற்படுங்கள்; கிழக்கு மக்களுக்கு அறிவுரை

### மாகாண ஆளுநர் பேச்சு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் மேற்குலக நாடுகளினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சதித் திட்டங்கள் தொடர்பில் கிழக்கு மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.


நாட்டின் இறையாண்மைக்கு எதிராக பான் கீ மூன் செயற்பட்டு வருவதாகவும், இவ்வாறான செயற்பாடுகள் குறித்து கிழக்கு மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியதுடன், இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### மாணவச் செல்வங்களே

**☞ உள்ளே கல்வி முரசு**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I இன் விசேட வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

# உலகின் மிகக்குறைந்த புவியீர்ப்பு மையமாக இலங்கை உள்ளது




(கொழும்பு)

உலகில் புவியீர்ப்புச் சக்தி மிகவும் குறைவாக காணப்படும் மையமாக அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகளால் இலங்கை கணிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் புவியீர்ப்புச் சக்தி பிரிந்து செல்லும் பரம்பல் முறை குறித்து அண்மையில் விஞ்ஞானிகள் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் போதே இலங்கையானது மிகவும் குறைந்த புவியீர்ப்பைக் கொண்ட மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.இலங்கையிலும் தென் மாகாணமும் அதன் கடலோரப் பகுதிகளுமே கூடுதலான அளவில் புவியீர்ப்புச் சக்தி குறைவாக காணப்படும் பிரதேசங்களாகும். அதற்கான காரணம் குறித்து விஞ்ஞானிகளால் இதுவரை கண்டறிய முடியாமற் போயுள்ளது.

பொதுவாக கடலோரப் பிரதேசங்களில் அதிகூடிய புவியீர்ப்புச் சக்தி காணப்படுவது இயல்பாக இருந்த போதிலும், தென்னிலங்கையின் கடலோரப் பிரதேசங்கள் அதற்கு எதிர்மாறான பண்பைக் கொண்டுள்ளன.

உலகின் அதிகூடிய புவியீர்ப்புச் சக்தி வலயமாக பிரிட்டன் மற்றும் கிரீண்லன்ட் தீவுகளுக்கிடையிலான கடல் பகுதி காணப்படுவதுடன், அங்கு 60-100 வரையயான மிலிகல் (புவியீர்ப்புச் சக்தி அளவீடு) புவியீர்ப்புச் சக்தி நிலவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரம் தென்னிலங்கையில் புவியீர்ப்புச் சக்தியான மறை, பெறுமதியில் 60-120 அளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீள் குடியேறிய மக்கள் மழையால் பெரும் பாதிப்பு

(தெல்லிப்பழை)

அண்மை நாட்களாக பெய்துவரும் மழையினால் வலிகாமம் வடக்குப்பகுதியில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்தப்பகுதியில் மக்கள் மீள்குடியேறியுள்ளதால் மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ள நிலையில், மீள்குடியேறிய மக்கள் தற்காலிக கூடாரங்களிலேயே தங்கியுள்ளனர்.

மீள் குடியேறிய மக்களுக்கு பல்வேறு தரப்பினரும் கூரைத் தகடுகள் வழங்கப்பட்டுவரும் நிலையில், தற்போது பெய்துவரும் மழையினால் நிரந்தர வீடுகள் இல்லாததால் வீடுகளுக்கும் மழை நீர் வருவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.(02)

# வீதி அகலிப்பு பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை பிரதான வீதி அகலமாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக குறித்த வீதியில் உள்ள பாலங்கள், மதகுகள் புனரமைப்புச் செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இணுவில் பகுதியில் இருந்து முதற்கட்டமாக வீதி அகலிப்புப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி அகலிக்கப்படுவதால் இடிக்கப்பட்ட பொதுமக்களின் மதில்களைக் கட்டும் பணிகளும் இந்த வீதியில் இடம்பெற்று வருகின்றன. (02)

# வெசாக் கொண்டாட்டங்கள் சிறப்பு நிகழ்விற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

புத்த ஜெயந்தியை முன்னிட்டு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் வெசாக் தினத்தை சிறப்பாக அனுஷ்டிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 17ஆம் திகதியன்று இத்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்குப் பிரமாண்டமான முறையில் பந்தல்கள் மற்றும் வெசாக் கூடுகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வருடம் நடைபெற்றது போன்று இவ் வருடமும் பிரமாண்டமான முறையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.


போர் முடிவுக்கு வந்த பின்னர் இனமத மொழி பேதங்கள் இன்றி மக்கள் அனைவரும் சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு வருகின்றனர். இம்முறையும் வெசாக் தினத்தில் பெருமளவான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (02)

# மூடப்பட்ட வைத்தியசாலைகளை மீண்டும் திறக்க முயற்சி

(கொழும்பு)

மருத்துவர்களுக்கான பற்றாக்குறை காரணமாக மூடப்பட்ட 97 வைத்தியசாலைகளை மீண்டும் திறக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிரிசேன தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 80 வைத்தியசாலைகளும், நுவரேலியா மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 17 வைத்தியசாலைகளுமே தற்போது இயங்காத நிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.



இந்த நிலையில், அடுத்த வருடம் அளவில் புதிதாக 270 மருத்துவர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், அதன் பின்னர் இந்த வைத்தியசாலைகளை மீள இயங்க வைக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## வீதி புனரமைக்க கோரிக்கை

(தெல்லிப்பழை)

யாழ்ப்பாணம் கீரிமலை பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இவ் வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த வீதியில் சண்டிலிப்பாயில் இருந்து நிலாவெளி வரையான வீதி குன்றும் குழியுமாக காட்சி தருகின்றது. இந்த வீதியை புனரமைப்பு செய்யுமாறு பல்வேறு தரப்பினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தற்போது வலிகாமம் வடக்குப் பகுதியில் மக்கள் மீள் குடியேறியுள்ள நிலையில் இந்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

அத்துடன் இரவுவேளையில் இந்த வீதியூடாக பயணிக்கும் போது விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (02)

## பேலியகொட மீன் வர்த்தக ஊழியர்களுக்குச் சீருடை

பேலியகொட புதிய மீன் வர்த்தக கட்டடத் தொகுதியில் பணியாற்றுபவர்களுக்காக விசேட சீருடை ஒன்றினை வழங்குவதற்கு மீன்பிடித்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தத் தகவலை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மகில் சேனாரத்ன தெரிவித்தார்.

குறித்த கட்டடத்தொகுதியில், இடம்பெறும் கப்பம்கோருவது போன்ற நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.

இது தவிர, அங்கு பணியாற்றுபவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை, பேலியகொட மீன் விற்பனை நிலையத்திற்கு வரும் மக்களின் நன்மை கருதி, விசேட போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாரம்பரிய விளையாட்டு விழா

காரைநகர் கடற்படையினரின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டு விழா இன்றும், நாளையும் காரைநகர் கடற்படை முகாமிற்கு அருகில் அமைந்துள்ள திறந்தவெளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பாரம் பரிய விளையாட்டுக்களுக்கான மரதன், சைக்கிளோட்டம், கயிறு இழுத்தல், நீச்சல், கிறிஸ்மரம் ஏறுதல் உள்ளிட்ட பல விளையாட்டுப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. இவ் விழாவிற்கு தீவுப்பகுதி மக்கள் கலந்து கொள்வதற்கு ஏதுவாக விசேட போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் தீவுப்பகுதி மக்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (14)

## மலேரியாத் தொற்றின் பாதிப்பு குறித்து எச்சரிக்கை

உலகம் முழுவதும் ஒரு வருடத்தில் 10 லட்சம் வரையானவர்கள் மலேரியாத் தொற்று காரணமாக உயிரிழப்பதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. இதில் பெரும்பாலும் 5 வயதுக்கு குறைவான சிறார்களே பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

101 நாடுகளைச் சேர்ந்த மில்லியன் கணக்கிலான மக்கள் மலேரியாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வருடாந்தம் 450 க்கும் அதிகமான மலேரியா நோயாளர்கள் இனங்காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





**தமிழ், சிங்களப் புத்தாண்டினை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப்போட்டி யாழ். சிறைச்சாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் அ.ஆனந்தராஜா மங்கள விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும், ஆண்களுக்கான தலையணைச் சண்டை போட்டியொன்றினையும் படத்தில் காணலாம். (52)**

கண்ணுக்குத் தெரியும் கடவுளரான பெற்றோரை மதியாமல், கண்ணுக்குத் தெரியாத கடவுளின் அருளைப் பெற முயற்சிப்பது வெறும் மாயை. தாய் பிரம்மாவின் பிரதிபலிப்பு; தந்தை விஷ்ணுவின் மறுவடிவம். - பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# எதிர்பார்ப்பும், தேவையும்

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிலவி வரும் குறைபாடுகள், தேவைகள் என்பன குறித்த செய்திகளை ஊடகங்கள் அடிக்கடி வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இச்செய்திகளில் உண்மைத் தன்மை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, சம்பந்தப்பட்டவர்கள் அவற்றை மறுதலித்து, அறிக்கைகளையும், அவற்றுக்கான காரணங்களையும் மழுப்பல் பாணியில் வெளியிட்டு வருவது வழக்கம்.

குறைபாடுகள், தேவைகள் என்று குறிப்பிடும்போது, அவை மக்களின் அத்தியாவசிய தேவைகளை அடிப்படையாகக் கொண்டனவாகவே இருக்கும்.

வாழ்விடம், உணவு, சுகாதாரம், போக்குவரத்து, கல்வி போன்ற தேவைகளில் உள்ள பலவிதமான குறைபாடுகளை ஊடகங்கள் காலத்திற்குக் காலம் சுட்டிக்காட்டுவதிலிருந்து தவறுவதில்லை.

இக்குறைபாடுகளும், தேவைகளும் ஊடகங்களின் சிருஷ்டிப்புகளோ, கண்டுபிடிப்புக்களோ அல்ல. மக்களின் அத்தியாவசியத் தேவைகள் குறித்து, அவை எதனை வெளியிடுகின்றதோ அவற்றின் உண்மைத் தன்மையை மாவட்ட, பிரதேச அபிவிருத்தி தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.

மக்களின் சுகவாழ்வைப் பொறுத்த மட்டில், அவர்களுக்குத் தேவையான மருத்துவத் தேவைகள் குறைவின்றிக் கிடைக்க வேண்டும். நோய் தீர்க்கும் மருந்து வகைகள், வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை நிலவி வருவதும், பயணிகள் போக்குவரத்திற்குப் போதிய பேருந்துகள் இல்லை என்பதும் இக்கூட்டங்களில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும் தெரிந்திருக்க வேண்டிய கடப்பாடு தங்களுக்கு உண்டு என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

குடாநாட்டு வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கும், வைத்தியர்களுக்கும், வைத்திய நிபுணர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருவதை அவர்கள் நிச்சயம் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்படி அவர்கள் தெரிந்து வைத்திருந்தால் தான், அதற்குரிய தீர்வுகளை உரியவர்கள் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத அறைக்கு வேண்டிய குளிரூட்டிகள் இல்லையென்றால், நோயாளிகளை மாடிப்படிகளில் ஏற்றிச் செல்வதில் உள்ள சிரமத்தைத் தவிர்ப்பதற்கு 'லிப்ற்' இல்லை என்றாலோ பழுது என்றாலோ அவற்றைத் தெரிந்தும், தெரியாததுபோல் வைத்தியசாலை நிர்வாகம் மௌனமாக இருக்கக்கூடாது.

அதிகாரிகளால் முடியாதுபோனால், அவற்றைச் செய்யக் கூடியவர்களுக்கு முறையிட்டு, அவர்கள் மூலம் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பொதுமக்களால் முன்வைக்கப்படும் தேவைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துவதில் அக்கறை கொள்ள வேண்டும். போக்குவரத்துச் சேவைகளைப் பொறுத்த வரையில், பேருந்து சாலைகளில் சேவையில் ஈடுபடக்கூடிய தகுதியுள்ள பேருந்துகள் குறைவாகவே காணப்படுவதாக உள்ளதெனில், பழுதடைந்த பேருந்துகளைத் திருத்துவதற்கும் அவற்றைச் சேவையில் ஈடுபடுத்துவதற்கும் அதிகாரிகள் முன்வரவேண்டும்.

எதை, எதை எப்போது செய்ய வேண்டுமோ அவற்றை அவ்வப்போது செய்யாமல் இருந்துவிட்டு, தவறுகளையும், குறைகளையும் பிறர் மீது சுமத்துவதைவிடுத்து, செய்ய முடிந்தவற்றைச் செய்து முடிப்பதற்கு அதிகாரிகள் முன்வரவேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பும், இன்றைய தேவையும் ஆகும்.

-ஆசிரியர்-

# நிரந்தர வீடுகள் அற்ற மக்களின் பிரச்சினைக்கு இந்திய வீட்டுத்திட்டத்தின் மூலம் தீர்வு கிட்டும்!

## தினமுரசுக்கு அளித்த விசேட செவ்வியில் கிளிநொச்சி அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன்



(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர் காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தினமுரசுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கூடுதலான மக்கள் நிரந்தர காணிகளோ, வீடுகளோ அற்ற நிலையில் அரச காணிகளிலும், தனியார் காணிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களால் தங்களுக்கு நிரந்தர வீடுகளோ, தற்காலிக வீடுகளோ வழங்கப்படவில்லை என பல்வேறு இடங்களிலும் வினா எழுப்பப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகிறது.

இதில் குறிப்பாக, நேர்ப் திட்டத்தின் கீழும், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மூலமும் இந்த மக்களுக்கு வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இதைவிட காணிகள் அற்ற மக்களுக்கு காணிகளை வழங்கி, அவர்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்து வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது மாவட்டத்தில் நிரந்தரக் காணிகளும் வீடுகளும் இல்லாத மக்களின் வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (110)

## கிளிநொச்சியில் 200 ஏக்கரில் இம்முறை சிறுபோகச் செய்கை

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தின் கீழ் இவ்வருடம் 200 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் பிரகாரம் மேற்படி குளத்தின் நீரின் அளவைக் கொண்டு குறித்த ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கையான பயறு, கடலை, உழுந்து உட்பட சிறுதானியச் செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

விவசாயிகள் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

## உதவிகள் இழப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் 186 குடும்பங்கள் நிரந்தரக் காணிகள் இன்றி வாழ்ந்து வருவதாக கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.


பாரதிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் இதுவரை 780 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இக்குடும்பங்களில் 186 குடும்பங்களுக்கு நிரந்தரக் காணிகள் இல்லை. இதனால், இம்மக்கள் தங்களுக்கான வீட்டுத் திட்ட உதவிகளையும் இழந்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (110)

## சிறுவர் பூங்கா புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை மேம்பாட்டுப் பேரவையினால் வைத்தியசாலை வளாகத்திலுள்ள சிறுவர் பூங்கா தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. குறித்த வைத்தியசாலையில் ஏற்கனவே, இருந்த இந்த சிறுவர் பூங்கா அசாதாரண சூழ்நிலையினால் சேதமடைந்து காணப்பட்டது.

இதேவேளை, தற்போது இச்சிறுவர் பூங்கா சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மேம்பாட்டு பேரவையால் புனரமைக்கப்பட்டு வருகிறது. (110)

## முல்லைத்தீவு பேருந்து நிலையத்தை புனரமைக்க நடவடிக்கை முன்னெடுப்பு



(கொழும்பு)

முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்படும் முல்லைத்தீவு போக்குவரத்து டிப்போவை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், கைத்தொழில், வணிகத் துறை அமைச்சருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை முல்லைத்தீவு பஸ் டிப்போவுக்குச் சென்ற அமைச்சர் றிசாத் பதியுதீன், தற்போதைய நிலை குறித்து கேட்டறிந்து கொண்டார். 1972 ஆம் ஆண்டு ஸ்தாபபிக்கப்பட்ட பஸ் டிப்போ தற்போது முற்றாக சேதமடைந்துள்ளதால் அங்கு பஸ் வண்டிகளைத் தரித்து வைப்பதற்கான வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனை மீளப் புனரமைப்புச் செய்து அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாகவும், இவ்விடத்திலிருந்து தூரப் பயண சேவைகளை ஆரம்பிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் றிசாத் பதியுதீன் சுட்டிக் காட்டினார்.

நிர்வாக கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கென 50 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். அமைச்சருடன் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கனகரத்தினம், முல்லைத்தீவு பிரதேச செயலாளர் எஸ்.தயானந்தா உட்பட பலரும் சமுகமளித்திருந்தனர்.

# பொலிஸாருடனான நல்லுறவை ஏற்படுத்த விளையாட்டு நிகழ்வு களமாக அமைகிறது

## காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(வடமராட்சி)

பொதுமக்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் நல்லதொரு இணக்கப்பாட்டையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் வகையிலேயே விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் இவற்றின் மூலம் இவர்களுக்கு இடையில் நல்லதொரு ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகின்றோம் என்று காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

நேற்றுப் பருத்தித்துறை திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் பருத்தித்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், பருத்தித்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் முதற்தடவையாக இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகிறது. எனவே, எதிர்காலத்தில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு சுமுக உறவு நிலவ வேண்டும் என அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித்கொத்த தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன், பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் மு. சிவநேசன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி பிரதேச அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் மற்றும் கிராம அலுவலர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (100)

# பாரம்பரிய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டியது எமது கடமையாகும்

## பேராசிரியர் சத்தியசீலன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மண்ணில் பாரம்பரியம் மிக்க வரலாற்றுச் சின்னஙகளை பாதுகாக்கும் வகையில் அவை பராமரிக்கப்படாமையினால் இன்று அழிந்துபோகும் நிலையில் காணப்படுகின்றது. எனவே இவற்றைப் பாதுகாக்கும் வகையில் யாழ்.மாநகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

பாரம்பரியம் மிக்க நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் எடுக்காது போனால் காலப்போக்கில் அவை மழுங்கடிக்கப்பட்டுவிடும்.

இவ்வாறு பாரம்பரியமிக்க பல இடங்கள் தற்போது கவனிப்பாரற்றுக் காணப்படுவதால் அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை எவராலும் உணரமுடியாதுள்ளது.

இந்நிலையில் வருங்கால சந்ததியினர் இவற்றை அறிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவை முக்கியமற்ற இடங்களாக எமக்கு காட்சி அளிக்கின்றது.

யாழ்.நல்லூரில் உள்ள யமுனா ஏரிப் பகுதி எந்தவிதமான பராமரிப்புக்களும் இன்றி வெறும் பற்றைக் காடாகவே காட்சியளிக்கிறது.

வரலாற்றுச் சின்னங்கள் அழிந்து போவதற்கு யமுனா ஏரியை சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

இதேபோல் இன்னும் எத்தனையோ வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப்பாதுகாத்துப் பராமரிக்காது விடுவோமானால் எதிர்கால சந்ததிக்குச் செய்யும் பெரும் துரோகமாகவே முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மீட்கப்படாத நகைகள் ஏலத்தில்

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணம், மானிப்பாய், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, சுன்னாகம் ஆகிய கிளைகளில் கடந்த 31.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 08 ஆம் திகதி சனிக்கிழமை அன்று ஏலத்தில் விடப்பட உள்ளது.

எனவே நகையை மீட்காத வாடிக்கையாளர் குறித்த திகதிக்கு முன்னர் வங்கிக்குச் சென்று காலாவதி திகதியை நீடிக்கவோ, அல்லது அடகை மீட்கவோ முடியும் என வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (கா)

# வேலணை மத்திய கல்லூரியூடான வீதிகள் அவலநிலை, பயணிகள் பாதிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்துறை புளியங்கூடல் சந்தியிலிருந்து வங்களாவாடிச் சந்திக்கு செல்லும் வேலணை மத்திய கல்லூரியூடான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதியால் தினசரி பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் வர்த்தகர்கள், மீனவர்கள், உல்லாசப்பயணிகள் எனப் பலர் பிரயாணம் செய்கின்றனர்.

தற்போது இடைஇடையே பெய்து வரும் மழையினால் வெள்ள நீர் தேங்கிநிற்பதால் வாகனப் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதிப் பொதுமக்களும் மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனா(74)

# ஆனைக்கோட்டை - வட்டுக்கோட்டைவீதி புனரமைப்பினால் பயனாளிகள் மகிழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையிலிருந்து, வட்டுக்கோட்டைக்குச் செல்லும் வழியில் நவாலி இராணுவ முகாமிற்கு முன்னால் காணப்பட்ட பாரிய மூன்று குழிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் செப்பனிட்டுள்ளதனால், அப்பகுதியால் பயணிப்போரின் சிரமம் தவிர்க்கப்பட்டுள்ளது.

கடந்த ஒருவருடத்திற்கும் மேலாக இப்பகுதியில் சிறிய குழிகளாகக் காணப்பட்ட இந்தக் கிடங்குகள் நாளடைவில் பெரிதாகி, பாரிய மூன்று குழிகளாக மாற்றம் பெற்றன.

இதனால் அப்பகுதியால் செல்லும் வாகனங்கள் குறித்த குழிகளுக்குள் புதையுண்டு, பலத்த சிரமத்தின் மத்தியிலேயே பயணத்தை மேற்கொண்டன. இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குறித்த மூன்று குழிகளையும் கற்கள் மூலம் நிரப்பி, தார் ஊற்றியதுடன் அவ்வீதியிலுள்ள ஏனைய சிறிய குழிகளையும் செப்பனிட்டு வருகின்றனர். (கா)

# தந்தை செல்வாவின் 34 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 34 ஆவது நினைவு நாள் நிகழ்வுகள் நாளை செய்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவல் சபையின் தலைவரும் தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் ஆயருமான சு.ஜெபநேசன் தலைமையில் யாழ்முற்ற வெளியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. (கா)

# தொடரும் மழையினால் நிலத்தை பண்படுத்தும் பணியில் விவசாயிகள்

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டிலும் பரவலாக பல்வேறு பிரதேசத்திலும் சுமாரான மழைபெய்து வருவதை பயன்படுத்தி விவசாயிகள் தமது விவசாய நிலங்களை பண்படுத்தும் நிலங்களைப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விவசாயப் பயிர்களை மீளப் பயிரிடும் பொருட்டு விளை நிலங்கள் உழுது பசளையிடும் பணிகள் முழு வீச்சில் இடம்பெற்று வருகின்றன.

சில வயல் நிலங்கள் உழுது பசளையிடும் பணிகள் இடம்பெற்று வருவதோடு சிலர் பயறு, உழுந்து, கௌபி போன்றவற்றையும் பயிரிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (வி)

# உள்ளூர் விவசாயத்தின் அபிவிருத்தி ②



உணவு உற்பத்திக்குள் உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை இன்று நாமெல்லோரும் உணர்ந்திருக் கிறோம். எமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இது தேசத்தின் அபிவிருத்திக்கான உணர்வலை. எங்களூரிலுள்ள வளங்களை சிறந்த முறையில் வினைத்திறனான வகையில் பயன்படுத்திக் கொள்ளும் அதே நேரத்தில், அருமை பெருமையான இயற்கையருளிய வளங்களைப் பாதுகாக்கவும் நாம் முன்வரவேண்டும்.

எமது பாரம்பரியம் புனிதமானதும் பெறுமதியான துங்கூட. இப்பாரம்பரியத்தினூடாக எமது விவசாயத்தைக் கட்டியெழும்பும் வழிமுறைக்குள்ளேயே நாமெல்லோரும் இணைந்திருக்கின்றோம் என்னும் நல்ல செய்தியை இவ்விடத்தில் பதிவு செய்வதுடன் எமது பாரம்பரிய முறைகளை கணக்கிலெடுக்காது, சிறிதும் கவனத்திற்கொள்ளாது பயிர்ச் செய்கையை நடைமுறைப்படுத்த முயற்சித்ததால் வந்த விளைவுகள் அனைத்தையும் கண்டுகொண்டு பார்க்கக்கூடியதாக உள்ளதல்லவா.

நல்லதொரு உதாரணமாக பாரம்பரிய அவதானிப்புக்களூடாக முன்னோர் கூறிவைத்த இயற்கையனர்த்தம் பற்றிய கருத்துக்களை, அறிவிப்பை கவனத்திற்கொள்ளாததன் விளைவே இன்று ஜப்பானில் தொடர்ச்சியான நிலநடுக்கத்துடனான சுனாமியினால் பல உயிர்கள் உடமைகள் என இழக்க நேரிட்டது என்ற கருத்து மெஞ்ஞான அறிவுசார்ந்து வலுப் பெறுகின்றதல்லவா. எது தேசத்து விவசாய உற்பத்திக்கும் அது சார்ந்த கைத்தொழிற் புரட்சிக்கும் இது பொருந்தும். எமது நாடு விவசாய வளங்கள் நிறைந்த உயிர்ப்பல்வகமை (Biodiversity) யினைக் கொண்ட அழகான தீவு. இங்குள்ள வளங்களை நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை என்பதும் அவ்வளங்களை விருத்தி செய்து பயன்படுத்துவதற்கான திட்டங்களை நாம் கொண்டிருக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதே.

மரபுசார்ந்த வழிமுறைகளை, முன்னோர்கள் அனுபவமூடாக கண்டெழுதியதை இக்காலத்துக்கு ஏற்றவாறும் விஞ்ஞான வளர்ச்சியினூடாக அவற்றிற்கு விளக்கங்கொடுத்து பயன்படுத்துவதும் சாலச்சிறந்ததாகும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியை அதிகமாக முன்னிலைப்படுத்தாத அக்காலத்தில் பாரம்பரிய முறைகளூடாக பயணித்த அபிவிருத்திக்கு தற்போது புதிய முலாம் பூசுவதாகவே இருக்கின்றது. இப்பாரம்பரிய முறைகள் இயற்கையை அனுசரித்து இயற்கையுடன் வாழ்ந்தவர்கள் வேதவாக்காக எழுதிவைத்த அனுபவங்களாகும். அனுபவமே நல்லதொரு பள்ளிக்கூடம் என்பதற்கிணங்க அந்த அனுபவத்தை இக்காலகட்டத்திற்கேற்பப் பயன்படுத்த முயற்சி செய்வதுடன் சமகால விஞ்ஞான வளர்ச்சி நிலைகளூடாக அதனை எடுத்துச் செல்வதும் இன்றைய தேவையாகும்.

உள்ளூர் விவசாய அபிவிருத்தியில் பாரம்பரிய முறைகள், வழிகாட்டல்களுக்கு இடமளித்தல் அவசியமானதாகும். தற்போது ஏற்பட்டுள்ள பூமி வெப்பமடைதல் நிகழ்விற்கு அடிப்படைக் காரணங்களாக வெளிவிடப்படும் பச்சை வீட்டு வாயுக்களான (Green House Gases) காபனீர் ஒட்சைட்டு, மீதேன் மற்றும் நைத்திரஸ் ஒட்சைட்டு ஆகியன காரணமாகும். இவ் வாயுக்களை அதிகமாக வெளிவிடும் விவசாய நடைமுறைகளான காற்றின்றிய நொதித்தல் மற்றும் பயன்படுத்தும் அசேதன இரசாயனங்கள் என்பன இருக்கின்றன என்பது கசப்பான உண்மை. இவற்றின் பயன்பாட்டை குறைப்பதற்கான வழிவகைகளை ஆராயும் அ[illegible]வேளையில் நடைமுறைச்சாத்தியமான, எமக்கு ஏற்ற இயற்கைக்கு அனுகூலமான வழிவகைகளை விவசாய செய்கையில் பயன்படுத்த வேண்டும். இது பற்றி விளக்கமளிக்க இக் கட்டுரைத் தொடர் முயற்சிக்கின்ற[illegible]

பூமி வெப்பமடைதலின் விளைவுகளாக காலநிலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. காலநிலை மாற்றம் (Cimate Change) இனிவரும் காலங்களில் விவசாயத்திலும் இன்னும் சுகாதார மற்றும் சூழலிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என எதிர்வு கூறியிருக்கின்றார்கள். இவ்வாறான காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து விடுபட எமது பாரம்பரிய முறைகளுக்கு புதுவடிவம் கொடுத்து, விவசாய அபிவிருத்தியை நிலைபேறான அபிவிருத்தியாக வளர்த்தெடுக்க வேண்டும். தமிழ் மூதாட்டி ஔவையார் அருளிய ஆத்திசூடியில் "பூமி திருத்தி உண்" எனக் கூறியுள்ளார். நிலத்தை உழுது அதனை திருத்தி உணவு உற்பத்தி செய்து உண்" என்பது இதன் விளக்கமாகும். நாமெல்லோரும் இச்செயலில் உணவு உற்பத்திசெய்வதில் சிறிதளவிலேனும் ஈடுபட வேண்டும். எமக்குத் தேவையான நஞ்சற்ற உணவை எம்மாலியன்றவரை உற்பத்தி செய்யலாம்.

வீட்டுத்தோட்டம், பாடசாலைத் தோட்டம் மற்றும் அரச நிறுவனங்களில், தனியார் நிறுவனங்கள் என அனைத்து இடங்களிலும் மாதிரித் தோட்டங்கள் அமைத்தல் என்பன சமகால நிகழ்வுகளாக மாறிவருகின்றன. இவற்றின் மூலம் உணவு உற்பத்தி என்பது ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பாடசாலையிலிருந்தும் இணைந்து உருவாக்கம் பெறுவதுடன் அனைவரதும் பங்களிப்பும் இதில் கிடைக்கின்றது.

இது ஒருபக்கமிருக்க வடபகுதியில் கிடைக்கின்ற இயற்கை வளங்களுள் முதன்மையான தாவர வளமாக பனை, தென்னை சார்பான அபிவிருத்தி என்பனவற்றிற்கு மேலும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இவ்விரு விருட்சங்களும் வடபகுதி மக்களது வாழ்வாதாரத்திற்குரிய மரங்களாக இருப்பது சிறப்புக்குரியது. இம்மரங்களிலிருந்தும், இவற்றினது சூழற்தொகுதியிலிருந்தும் பெறப்படும் பயன்பாடுகள் எம் உறவுகளுக்கு சுயமான தொழிலைச் செய்வதற்கும் அதன்மூலம் பனை - தென்னை வளஞ்சார் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கும் உதவிடும். வடபகுதிக்கேயுரிய இயற்கை தந்த விவசாய பூமியும், கடல் வளமும் இருக்கும் போது சிறந்த முறையில் திட்டமிட்டு செயற்படுத்தப்படும் மக்கள் மயப்படுத்தப்பட்ட. விவசாயியை நோக்கிய அபிவிருத்தி நிகழ்வுகள் இம் மக்களது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பப் பெரிதும் உதவும். விவசாய விளைபொருட்களின் தரம் நுகர்வோரை நோக்கியதாக அவர்களது சுகாதாரத்தை மேம்படுத்துவதாக இருத்தல் வேண்டும். அதே நேரத்தில் விளைச்சலினளவு விவசாயிக்கு நம்பிக்கை கொடுப்பதாகவும் நுகர்வோருக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்வதாகவும் அமைய வேண்டும். இவ்வாறான விவசாய அபிவிருத்தியில் எங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பும் முக்கியமானது. நாம் எவ்வாறு இதில் பங்களிக்கலாம்? வாருங்கள் இன்னும் விரிவாகப் பார்க்கலாம்.

பேராசிரியர்: கு.மிகுந்தன்
தலைவர்
விவசாய உயிரியல் துறை,
விவசாயபீடம்,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# வங்கிகளுக்காக மக்கள் என்ற நிலைமாறி மக்களுக்காக வங்கி என்ற நிலை உருவாகியுள்ளது

## மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

கடந்த அறுபது, எழுபது காலப் பகுதிகளில் வங்கிகளுக்காக மக்கள் என்ற நிலை காணப் பட்டபோதிலும், இன்று மக்களுக்காகவே வங்கிகள் எனும் அளவிற்கு நிலைமை மாற்ற மடைந்துள்ளதாக மத்திய வங்கியின் வடமாகாண முகாமையாளர் இ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

'சொண்ட்' நிறுவனத்தில் நேற்றையதினம் நடைபெற்ற யாழ் மாவட்ட பொருளாதார மேம பாட்டிலும், புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதில் வங்கித்துறையின் பங்களிப்பு எனும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது வங்கியின் பிரதான இலக்காக வாடிக்கையாளரே காணப்படுகின்றனர். வாடிக்கையாளரைத் தம் பக்கம் இழுக்கும் வகையில் ஒவ்வொரு வங்கிகளும் தமது செயற்பாட்டை முழு வீச்சில் முன்னெடுத்து வரு கின்றன.

தற்போதைய சூழலை அடுத்து 90 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தமது கிளைகளை வடக்கில் நிறுவியுள்ளன. இவற றில் நாற்பதிற்கும் மேற்பட்ட கிளைகள் குடாநாட்டில் இயங்குகின்றன.

வங்கிகள் இப்பிரதேசத்திற்குப் பொருத்தமான கைத் தொழில்களை இனங்கண்டு அவற்றுக்கு அதிகளவு கடன்களை வழங்கவேண்டும். இதன் மூலம் பல தொழிற்சாலைகள் புதிதாக உருவாவதுடன், பலர் வேலை வாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

வங்கிகள் கடன்களை வழங்குவதன்மூலம் சிறிய, நடுத்தர கைத்தொழிற்சாலைகளை அமைப்பதுடன் மேலும் பலரை கைத்தொழிற்சாலைகளை



நிறுவ ஊக்குவிக்க முடியும்.

எமது பிரதேசத்தில் கடன் பெறுவதென்பது பொதுவாக குறைவாகவே உள்ளது. இதற்கு கடந்தகால அனுபவங்கள் காரணமாக அமையக்கூடும். இதனை விடுத்து, கடன்களைப் பெற்றுத் தொழில் செய்ய அல்லது செய்யும் தொழிலை மேம்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (கா)

# பிரேத அறையின் குறைகளை நீக்க புலம்பெயர்ந்தவர்கள் உதவவேண்டும்

## சட்ட வைத்திய அதிகாரி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலையின் பிரேதஅறை பல அடிப்படை வசதிகளற்ற நிலையிலேயே காணப்படுகிறது. வட மாகாணத்தில் அதிக நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் இவ்வாறான பல முக்கிய தேவைகள் இன்னும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. இங்கு பிரேத அறைக்குக் கொண்டு வரும் இறந்தவர்களின் உடல்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கும் வரை உடல்களைப் பாதுகாப்பாக வைக்கக்கூடிய குளிரூட்டி வசதிகள் இல்லாமையால் வைத்தியசாலை ஊழியர்களும் இறப்பவர்களின் உறவினர்களும் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குளிரூட்டி வசதி இல்லாததால் இறந்த உடல்கள் உடனடியாகப் பழுதடைகிறது. இதனால் வைத்தியசாலைச் சூழலில் சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

இப்பிரதேச அறைக்கு அருகிலேயே இரத்த வங்கியும் ஆய்வு கூடமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ். போதனா வைத்தியசாலையின் இப்பிரேத அறையின் தேவைகளை நிவர்த்தி செய்யப் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் கைகோர்க்க வேண்டும் எனச் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவரூபன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# எண்ணெய் உற்பத்தி பாதிப்பு

(ஆனைக்கோட்டை)

தற்போது பெய்து வரும் மழையினால் நல்லெண்ணெய் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

தென்பகுதியில் மழைபெய்து வருவதால் அங்கிருந்து வரும் எள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (104)

# நவாலியில் பன்றித் தொல்லை விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு

(ஆனைக்கோட்டை)

நவாலிப் பகுதியில் விவசாயிகளினால் மேற்கொள்ளப் பட்டு வரும் சிறுதானியப் பயிர் வகைகளப் பன்றிகள் மற்றும் எலிகள் அழித்து நாசம் செய்வதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் தற்போது பயற்றங்காய், கீரை மற்றும் சிறுதானியங்கள் என்பன பயிரிடப் பட்டு அறுவடை செய்யும் நிலையில் இரவுவேளை களில் வரும் பன்றிகள் மற்றும் எலிகள் அவற்றை அழித்து நாசம் செய்வதாகவும், இது நாளாந்தம் இடம்பெறுவதாகவும், இதனால் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் கவலை தெரிவிக் கின்றனர். (104)

# இருளில் மூழ்கியுள்ள வீதியால் விபத்துக்கள் ஏற்படுமென அச்சம்

(யாழ்ப்பாணம்)

கொய்யாத்தோட்டம் கடற்கரை வீதியில் வீதி விளக்குகள் இல்லாமையால் இரவு வேளைகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் வாகனங்கள் போக்குவரத்துச் செய்யும்போது அவை தெரியாத அளவிற்கு வீதி இருளாகக் காணப்படுகிறது. இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவுவதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைவிட குறித்த வீதியும் படுமோசமான நிலையில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

குறிப்பாக இவ்வீதியூடாக பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், மீனவர்கள் எனப் பலர் பயணம் செய்கின்றனர். இதைவிட இரவு வேளைகளில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களும் இவ்வீதியால் பயணம் செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

தற்போது இடையிடையே பெய்து வரும் மழையினால் குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ்வீதியில் நீர்தேங்கி நிற்பது வாகனப் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறியதாகப் புனரமைக்கப்பட்ட இவ் வீதி முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாததால் இவ்வீதியால் பயணம் செய்யும் வாகனங்கள் மண்ணுக்குள் புதையும் நிலை காணப் படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, பொதுமக்களின் நன்மை கருதி சம்பந்தப்பபட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைப்புச் செய்வதோடு, வீதி விளக்குகளையும் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (21)

# கல்விச் செயற்பாட்டுக்கு உடனடி உதவி தேவை

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை 100 ஆவது ஆண்டை எட்டுகின்றபோதிலும், போதிய ளவு வளங்கள் இன்றி இயங்கி வருவதாக நலன் விரும்பியும் பாடசாலை பழைய மாணவருமான சந்திரதாஸ் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில் -

இப்பாடசாலையில் நூலகம் இல்லை. அத்துடன் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சங்கீதம் போன்ற பாடங்களைக் கற்பிப் பதற்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையில் மாணவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்கும் வகையில் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (100)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(25.04.2011–திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 12 ஆம் நாள்.

இராகுகாலம்7.30–9.00, சுபநேரம் 12.00 –1.30, நட்சத்திரம் உத்தராடம் மு.ப.11.28 வரை, திதி: அட்டமி பி.இ. 1.18 வரைக்கும்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, தேக சுகம், காரிய சித்தி.

ரிஷபம்:– வீண் செலவு, நண்பர் பகை, முயற்சி தோல்வி.

மிதுனம் :– கடின உழைப்பு, பண வரவு, தேக சுகம்.

கடகம்:– பொருள் விரயம், பணச் செலவு, மனச் சஞ்சலம்.

சிம்மம்:– மேலோர் பாராட்டு, பண வரவு, பொருள் சேரும்.

கன்னி :– பொருள் இழப்பு, பண வரவு, வீண்பயம்.

துலாம் :– அதிக செலவு, வீண் பயம், காரியத் தடை.

விருச்சிகம்:– பண வரவு, மேலோர் ஆசி, காரிய சித்தி.

தனுசு:– வீண் செலவு, பண வரவு, காரிய சித்தி.

மகரம்:– பொருள் சேரும், பண வரவு, காரியத்தடை.


கும்பம் :– தேக சுகம், பணச் செலவு, பொருள் இழப்பு.

மீனம்:– கடின உழைப்பு, வீண் பயம், மேலோர் ஆசி.



யாழ்ப்பாணம் மில்லேனியம் விருந்தினர் விடுதியில் மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தர் பயிற்சிக்கான நிலையம், நல்லூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நடத்திய பயிற்சிநெறியில் மத்தியஸ்தர் சபை வளவாளரும், நிந்தவூர் அல் அஸ்ரா தேசிய பாடசாலையின் ஆசிரியையுமான பாஸ்லி உரையாற்றுவதையும் கலந்துகொண்ட உறுப்பினர்களையும் காணலாம். (படம்: கார்த்திகேயன்)

# நிபுணர் குழு அறிக்கையைத் தோற்கடிக்க ரஷ்யாவும், சீனாவும் ஆதரவு அளிப்பு



ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கலோவ் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிசைச் சந்தித்து தமது நாட்டின் நிலைப்பாடு குறித்து விளக்கமளித்ததுடன், இலங்கைக்கு ரஷ்யா ஆதரவளிக்கும் என்றும் உறுதி வழங்கியுள்ளார்.

சீனத் தூதுவர் யங் சூ பிங்கும் இலங்கைவுக்கு சீனா உறுதியான ஆதரவை வழங்கும் என்று இலங்கை அமைச்சர் பீரிசிடம் கூறியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ஐ.நா பொதுசெயலருடன் விரைவில் தொடர்பு கொண்டு அறிக்கையை வெளியிடும் முடிவைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தப் போவதாக ஓமான் புறப்பட முன்னதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கூறியுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

(கொழும்பு)

**இலங்கை மீது போர்க்குற்றங்களைச் சுமத்தும் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையைத் தோற்கடிக்கும் முயற்சிகளுக்கு சீனாவும், ரஷ்யாவும் பலமான ஆதரவு தெரிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

இதற்கிடையே, நிபுணர் குழு அறிக்கையை பகிரங்கப்படுத்துவதில்லை என்று பான் கீ மூனிடம் இருந்து உறுதியைப் பெற்றிருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத் தலைவர்களுக்குக் கூறியுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், பான் கீ மூனிடம் இந்த வேண்டுகோளை விடுத்ததை நியுயோர்க்கிலும் கொழும்பிலும் உள்ள ஐ.நா அதிகாரிகள் உறுதி செய்துள்ளதாக கொழும்பு வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் பான் கீ மூன் எந்தப் பதிலையும் வழங்கவில்லை என்றும் ஐ.நா அதிகாரிகளை மேற்கோள்காட்டி அந்த வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, மாஸ்கோ பயணத்தை முடித்துக் கொண்டு ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் இன்று நியுயோர்க் திரும்பிய சில மணிநேரங்களில் நிபுணர்குழுவின் அறிக்கை பகிரங்கமாக வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

## விரிவுரையாளர்களுடன் கலந்துரையாட குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் விரிவுரையாளர்கள் சங்கத்துடன் ஆராய்வதற்காக, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குழு ஒன்றை நியமித்துள்ளார்.

கபீர் ஹசீம், லக்ஸ்மன் கிரியல்ல, விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் அகில விராஜ் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் அடிப்படையில், ரணில் விக்கிரமசிங்க, விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிபுணர்குழு அறிக்கையை முறியடிக்க தயாராகின்றது வெள்ளை அறிக்கை


(கொழும்பு)

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையை முறியடிக்கும் வகையிலானதொரு நகர்வாக, புலிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட போர் தொடர்பாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு வெள்ளை அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருகிறது.

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பணிப்பின் பேரிலேயே இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கப்பட்டுவருகிறது.

ஈழப்போர் தொடர்பான இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு, சட்டநிபுணர் கோமின் தயாசிறி தலைமையிலான, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த மூத்த சட்டவாளர் குழுவொன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள சட்டநிபுணர்கள் தற்போது வெள்ளை அறிக்கையைத் தயாரிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



இந்த வெள்ளை அறிக்கை போர் பற்றிய அதிகளவு விளக்கங்கள், தகவல்களை உள்ளடக்கியதாக அமையும் என்றும் முறைப்படியான பதிலாக அமையும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்ட போது இஸ்ரேலிய அரசாங்கம் செயற்பட்டதற்கு ஒப்பான வகையிலேயே பெரும்பாலும் இந்த வெள்ளை அறிக்கை தயாரிக்கப்படலாம் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக மாவட்ட மட்டத்தில் கூட்டங்கள்

(கொழும்பு)

ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக தேசிய ரீதியான நிலைப்பாடு ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாவட்ட மட்டத்தில் கூட்டங்களை ஒழுங்கு செய்யும் பொறுப்புகளை அமைச்சர் விமல் வீரவன்சவிடம் ஒப்படைத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் இந்த கூட்டங்கள் நடைபெற உள்ளன. இந்தக் கூட்டங்களை ஏற்பாடு செய்வதற்காக இணைப்புக்குழுவில் இணைப்பாளர்களாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கெஹெலிய ரம்புக்வெல்ல, டலஸ் அழகப்பெரும, சம்பிக்க ரணவக்க, கருணா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

நிபுணர்கள் குழுவிற்கு எதிரான கூட்டங்களை கட்சி பேதமின்றி ஏற்பாடு செய்ய உள்ளதாகவும், கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்க உள்ளதாகவும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

## வெளிநாட்டு தூதுவர்கள் சந்திப்பில் சீனத்தூதுவர் கலந்துகொள்ளவில்லை

### குழப்பத்தில் வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளிநாட்டு தூதுவர்கள் இராஜதந்திரிகளுடன் கடந்த 21ஆம் திகதி நடத்திய சந்திப்பில் சீனத் தூதுவர் கலந்து கொள்ளாத விவகாரம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு கடும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கும் நோக்கில், இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்திருந்தார்.

கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். ஆனால் சீனத் தூதுவர் யங் சூ பிங் மட்டும் பங்கேற்கவில்லை.

அவர் இந்தச் சந்திப்பில் பங்கேற்காததற்கான காரணத்தை இதுவரை வெளியிடவில்லை.

சீனத்தூதுவருக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு அழைப்பு விடுக்கவில்லையென ஒரு தகவல் கூறுகிறது.

ஆனால், இலங்கை வெளிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் சீனத் தூதுவருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்ற தகவலை நிராகரித்துள்ளார்.

சீனத்தூதுவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ள அந்த அதிகாரி, அழைப்பிதழ் கிடைத்ததை சீனத்தூதுவர் தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தியதாகவும் கூறியுள்ளார்.

இந்தநிலையில் அமைச்சர் பீரிஸ் நடத்திய சந்திப்பில் சீனத்தூதுவர் பங்கேற்காததற்கான காரணம் என்னவென்று இலங்கை வெளிவிவகார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தவிவகாரம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கையைத் தோற்கடிக்க சீனாவையும் ரஷ்யாவையுமே இலங்கை நம்பியுள்ள நிலையில், சீனத்தூதுவருக்கு அழைப்பு விடுக்கப்படாமல் போனதா என்றும், இதன் பின்னணியில் ஏதேனும் சதித்திட்டங்கள் உள்ளனவா என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை பயங்கரவாதம் தலைதூக்க வித்திடும்

### என்கிறார் கிழக்கு மாகாண ஆளுநர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ முனின் அறிக்கை நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க வித்திடும் எனத் தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண ஆளுனர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம.

திருகோணமலை கோமரசங்கடவெல பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கிழக்கு மாகாண ஆளுநர், பான்கிமூனின் அறிக்கை நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அனுபவிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது,

இதனால் நாடு மீண்டும் முன்னைய நிலைக்குத் தள்ளப்படுவதுடன் மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தலை தூக்க இது வித்திடும் எனத் தெரிவித்தார்

# பதவி விலக வேண்டும்



ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வரும் இலங்கை வீரர்களை உடனடியாக நாடு திரும்புமாறு கூறிய இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சர் அளுத்கமகே இராஜிநாமா செய்ய வேண்டும் என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வரும் இலங்கை வீரர்கள் இங்கிலாந்து தொடருக்கு முன் பயிற்சியில் ஈடுபடுவதற்காக மே 5ஆம் திகதி இலங்கை திரும்ப வேண்டும் என்று அமைச்சர் அளுத்கமகே உத்தரவிட்டார்.

இதையடுத்து இந்த விவகாரத்தில் இந்திய கிரிக்கெட் சபை தலையிட்டது. அதன்பேரில் மே 18ஆம் திகதி வரை ஐ.பி.எல். போட்டியில் இலங்கை வீரர்கள் விளையாடுவதற்கு கால நீடிப்பு செய்யப்பட்டது.

எனவே சொன்னதைச் செய்ய முடியாதவர் ஏன் தனது பதவியை ராஜிநாமாச் செய்யக்கூடாது என்று இலங்கையின் முன்னணிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனது கருத்தில் இருந்து திடீரென பல்டி அடித்துள்ள அமைச்சர், எப்போது வீரர்கள் நாடு திரும்ப வேண்டும் என்பது குறித்து முன்னரே தெரிவிக்காமல் கிரிக்கெட் சபை தடையில்லாச் சான்றிதழ் வழங்கியுள்ளது என்று கிரிக்கெட் சபை மீது குற்றம்சாட்டியுள்ளார். இதில் இருந்தே அவர் தனது கருத்தில் இருந்து பின்வாங்கியுள்ளது தெரிகிறது என்றும் செய்தியில் கூறப்பட்டுள்ளது.


# இதுவரை முடிவாகவில்லை

(சென்னை)

கிரிக்கெட்டில் முழுநேர பயிற்சியாளராகச் செயற்படுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், சென்னை சூப்பர் கிங்ஸ் பயிற்சியாளருமான ஸ்டீபன் பிளமிங் தெரிவித்தார்.

இது குறித்து பிளமிங் மேலும் கூறியது: சென்னை அணியின் பயிற்சியாளர் பணியை மிகவும் மகிழ்ச்சியாகச் செய்து வருகிறேன். இது மிகச்சிறந்த அனுபவம். முழு நேர பயிற்சியாளராவது குறித்து முடிவு செய்வதற்கு கால அவகாசம் வேண்டும். ஒரு பயிற்சியாளராக ஐ.பி.எல். போட்டி நடக்கும் இரண்டு மாதங்களில் நிறையப் பாடங்களைக் கற்றுக்கொண்டுள்ளேன் என்றார்.

இதேவேளை, இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளரைத் தேர்வு செய்வதற்காக இந்திய கிரிக்கெட் சபை தயாரித்துள்ள பட்டியலில் ஸ்டீபன் பிளமிங்கின் பெயரும் இடம்பெற்றுள்ளது.



இந்த நிலையில் அவர் இவ்வாறு கூறியிருப்பது, இந்திய அணியின் பயிற்சியாளராக பணியாற்றுவதற்குத் தனக்கு விருப்பம் இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 8 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் வெற்றி


(சென் லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் முதலாவது போட்டி நேற்று முன்தினம் சென் லூசியா மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டி.எம். பிராவோ 67, எட்வேட் 28 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் அணித் தலைவர் டரன் சமி ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வஹாப் இரண்டு, மொகமட் ஹபீஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 222 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 41.3 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மிஸ்பா உல் ஹக் 73, அசாத் சபிஜா 61 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் மொகமட் ஹபீஸ் 54 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிசோ இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் ஹபீஸ் தெரிவானார். இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று சென் லூசியா மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தாமத பந்து வீச்சு-அபராதம்




(சென் லூசியா)

பாகிஸ்தானுடனான ரி-20 போட்டியில் தாமதமாகப் பந்து வீசியமைக்காக மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவர் டரன் சமி மற்றும் அணி வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிராக சென் லூசியாவில் நடந்த 20 ஓவர் கிரிக்கெட்டில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தின் போது குறிப்பிட்ட நேரத் திற்குள் மேற்கிந்தியத்தீவுகள் அணி பந்து வீசி முடிக்கவில்லை. ஒரு ஓவர் தாமதமாக வீசியதையடுத்து மேற்கிந்தியத்தீவுத் தலைவர் டரன் சமிக்கு 20 சதவீதமும், அணியின் மற்ற வீரர்களுக்கு தலா 10 சதவீதமும் போட்டிக் கட்டணத்தில் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.





# மாற்று வீரர்

MUMBAI INDIANS

(மும்பை)


ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கான மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த அவுஸ்ரேலிய சகலதுறை வீரர் மோசஸ் ஹென்ட்ரிகஸ் காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்திருப்பதால், அணியில் இருந்து விலகிவிட்டார்.

அவருக்குப் பதிலாக சிம்பாப்வே சுழற்பந்து வீச்சாளர் ராய் பிரைஸ் ரூ.23 இலட்சத்திற்கு மும்பை அணிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். அணியுடன் இணைந்து விட்ட பிரைஸ் இந்த ஐ.பி.எல். தொடரின் எஞ்சிய போட்டிகளில் விளையாடுவார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



**ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஜூலியா பெண்கள் டென்னிஸ் சங்க போட்டிகளில் 3 வது முறையாக இறுதிப்போட்டிக்கு ஜூலியா கோர்ஜஸ் தகுதிபெற்றார்**

# புதிய தலைவராகத் தெரிவு



சுவிட்சர்லாந்து தேசிய கால்பந்தாட்ட அணியின் புதிய தலைவராக கோகன் இன்லர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி இங்கிலாந்து அணிக்கு எதிரான போட்டிக்கு இன்லர் தலைமை தாங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவிட்சர்லாந்து கால்பந்தாட்ட அணியின் தலைவராக கடமையாற்றி வந்த அலெக்ஸ் பெரி கடந்த மார்ச் மாதம் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அலெக்ஸ் பெரி தலைமைப் பதவி வகித்த காலத்தில், இன்லர் துணைத் தலைவராக கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய அணியை வழிநடத்த சந்தர்ப்பம் கிட்டியமையைப் பெரும் பாக்கியமாகத் தாம் கருதுவதாகவும், இங்கிலாந்துடனான போட்டியில் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வேன் என்றும், அதனைத் தொடர்ந்து வரும் போட்டிகளிலும் சிறப்பாகச் செயற்படுவேன் என்றும் இன்லர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ வீரர்களுடன் சச்சின்



(மும்பை)

புனேயில் உள்ள ராணுவ வீரர்கள் மறுவாழ்வு மையத்தில் உள்ள ஊனமுற்ற இராணுவ வீரர்கள் சச்சினை தனியாக சந்திக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தனர். ஆனால் சச்சின் இப்போது ஐ.பி.எல். போட்டியில் விளையாடி வருவதால் அவரால் செல்ல முடியவில்லை. இருப்பினும் வெள்ளிக்கிழமை அவர் வீடியோ மூலம் ராணுவ வீரர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய சச்சின், என் மரியாதைக்கும், அன்புக்கும் உரிய ராணுவ சகோதரர்களே, நாட்டுக்காக கடைசி வரை போராடும் உங்கள் மீது நான் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறேன் என்று கூறியதாக அங்குள்ள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் ஐ.பி.எல். போட்டிகள் முடிந்தவுடன் அவர்களை நேரில் சந்திப்பதாகவும் சச்சின் உறுதியளித்துள்ளார். உங்களை சந்திக்கும்போது உங்களுடன் டேபிள் டென்னிஸ் விளையாட விரும்புகிறேன் என்றும் சச்சின் கூறியுள்ளார். அப்போது ஒவ்வொரு குழந்தையும் உங்களையே முன்மாதிரியாகக் கொண்டுள்ளது என்று ராணுவ வீரர்கள் கூறினர். அதற்குப் பதிலளித்த சச்சின், குழந்தைகளின் ஆர்வத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. பெற்றோர்களும், குடும்பமும் தங்கள் குழந்தைகளுக்கு ஆதரவாக இருக்கும்போது அந்தக் குழந்தைகள் சாதனை படைப்பார்கள் என்றார்.

ஆயுதப் படை வீரர்கள் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது யமகா அணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் அனைத்துத் துறைகளிலும் பிரகாசித்த யாழ்ப்பாணம் யமகா விளையாட்டுக் கழகம் சிறப்பு வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக நடைபெற்ற குழு நிலைப் போட்டிகள், தனி நபர் போட்டிகள் மற்றும் தடகள விளையாட்டுக்கள் ஆகியவற்றில் 25 இற்கும் மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இதில் யமகா விளையாட்டுக் கழகம் பெருமளவிலான வெற்றிகளைத் தனதாக்கிக் கொண்டது.


குறிப்பாக கிரிக்கெட், எல்லே, மேசைப்பந்து, கரப்பந்தாட்டம் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் யமகா விளையாட்டுக் கழகம் தனது திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டது.

இப்போட்டிகளின் இறுதி நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் காலை 7 மணிக்கு ஆரம்பித்து சிறப்புற நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நிகழ்வாக நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கிரிக்கெட் சுற்றுப் போட்டி, எல்லே சுற்றுப்போட்டி, மெய்வல்லுநர் போட்டிகள் ஆகியவற்றுக்கான வெற்றிக் கிண்ணங்களை முறையே வி.கிருஷாந், எம்.மகிந்தன், அனிஷ் தயாந்தன் ஆகிய யமகா விளையாட்டுக் கழக வீரர்கள் பெற்றுக்கொண்டனர்.



இறுதியாக யமகா விளையாட்டுக் கழகத்துக்கான சிறப்புக் கிண்ணத்தை கழகத்தின் தலைவர் எஸ். சுபேதர் பெர்னாண்டோ பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட யமகா விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் வருகை தந்து வீரர்களுக்கு உற்சாகத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (21)



# சாயிபாபாவின் வரலாறு

சத்ய சாயிபாபா, 1926 அம் ஆண்டு நவம்பர் 23 அம் திகதி ஆந்திராவின் புட்டபர்த்தியில் பிறந்தார். இவரது இயற்பெயர் சத்யநாராயண ராஜு. இவரது பெற்றோர் ராஜு ரத்னகரம், ஈஸ்வரம்மா ஆகியோர். பக்தர்கள் சாயிபாபாவை கடவுளின் அவதாரமாகவே பார்க்கின்றனர்.

ஒரு நாள் பாபாவின் தாயார் ஈஸ்வரம்மா கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருக்கும் போது, வானில் இருந்து வந்த சக்தி வாய்ந்த ஒளி அவரது வயிற்றில் புகுந்ததாகவும், அதன் பின் கருவுற்றதாகவும், இது ஒரு அதிசய நிகழ்வு என்றும் ஈஸ்வரம்மா தெரிவித்தார்.

சாயிபாபா குழந்தைப் பருவத்திலேயே நாடகம், இசை, நடனம், கதை எழுதுதல், பாடல் இசை அமைப்பு எனப் பல துறைகளில் திறமையாக விளங்கினார். 1940 மார்ச் 8 ஆம் திகதி தனது சகோதரருடன் சாயிபாபா இருக்கும் போது, தேள் ஒன்று இவரைக் கொட்டியது. இதையடுத்து சில மணி நேரங்கள தன்நிலை மறந்தவராக இருந்தார். தொடர்ந்து சிரிப்பது, அழுவது, மௌனமாக இருப்பது போன்று இருந்தார். டாக்டர்கள் இவர் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்தனர். மத குருக்கள் உள்ளிட்டவர்கள் புட்டபர்த்தியில் இருந்த சாயிபாபாவின் உடலைப் பரிசோதித்தனர்.

1940, மே 23 இல் வீட்டில் இருந்தவர்களை அழைத்த சாயிபாபா, கைகளில் இருந்து கற்கண்டு வரவழைத்து காண்பித்தார். அவரது தந்தை, என்ன இது மாய மந்திரம் எனக் கோபத்துடன் கேட்டார். அதற்கு சாயிபாபா, நான் யார் தெரியுமா? நான் தான் சாயிபாபா. சீரடி சாயிபாபாவின் மறுஜென்மம் நானே என்றும் கூறினார். சீரடி சாயிபாபா 19 ஆவது நூற்றாண்டின் இறுதி முதல் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை மகாராஷ்டிராவில் வாழ்ந்தவர். இவர் சாயிபாபா பிறப்பதற்கு 8 ஆண்டுகளுக்கு முன் இறந்தார்.

சாயிபாபாவைத் தேடிப் பக்தர்கள் வர ஆரம்பித்தனர். சாயிபாபாவும் சென்னை உள்ளிட்ட தென் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்குச் சென்று பக்தர்களுக்கு அருள் வழங்கினார்.

1944 இல் பக்தர்கள் அவருக்குக் கோவில் கட்டினர். இந்த இடம் 100 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. தற்போது பிரசாந்தி நிலையமாக விளங்குகிறது. இந்த ஆசிரமம் 1948 இல் கட்டப்பட்டு 1950 இல் நிறைவடைந்தது.1954 இல் சாயிபாபா, அங்கு சிறு மருத்துவமனையை நிறுவி, அப்பகுதி மக்களுக்கு இலவச மருத்துவ வசதி அளித்தார். 1957 இல் வட இந்தியாவின் பல பகுதிகளின் கோவில்களுக்கு சாயிபாபா பயணம் செய்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார். வெளிநாடுகளில் உள்ளவர்களும் இவரது சக்தியை நம்பி பக்தர்களாகத் தொடர்ந்தனர்.

*சாயிபாபா அதிசயம்*

பக்தர் களால் அவதாரம், கடவுள் என அழைக்கப்பட்டவர் சாயிபாபா. லிங்கம், விபூதி, மோதிரம், வாட்ச் போன்றவற்றை வரவழைத்து மக்களை ஆச்சரியப்படுத்தினார். இவரது ஆன்மிக குரு ஷீரடி சாயிபாபா . இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஆசிரமங்கள் மூலம் சமூகத் தொண்டு செய்து வந்தார். இவரது கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிக்கிறது. இந்தியாவில் ஜனாதிபதி, பிரதமர், முதல்வர்கள் உள்ளிட்ட பிரபலங்கள் முதல் சாதாரண மக்கள் வரை, தனது அருளுரையால் ஈர்த்துள்ளார். 137 நாடுகளில் சாயிபாபாவுக்கு பக்தர்கள் உள்ளனர்.

இந்தியாவில் முக்கிய அரசியல் தலைவர்களான வாஜ்பாய், சங்கர்தயாள் சர்மா, நரசிம்மராவ், வெங்கடராமன், பி.டி. ஜாட்டி, எஸ்.பிரித்திவிராஜ் சவான், சந்திரசேகர், அர்ஜுன் சிங், ராஜேஷபைலட், சங்கரானந்த், பங்காரப்பா, வீரப்ப மொய்லி, சந்திரபாபு நாயுடு ஆகியோரும் இவரது பக்தர்கள். ரவிசங்கர், நானி பல்கிவாலா, டி.என்.சேஷன், சுனில் கவாஸ்கர் உள்ளிட்ட பல துறை அறிஞர்களும் இவரது பக்தர்களாக உள்ளனர்.

1993 ஜுன் 6 இல் சாயிபாபாவை கொல்ல நடந்த முயற்சி சர்வதேச செய்தியானது. இதில் 6 பேர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து சில சர்ச்சைகளும் எழுந்தன. ஆனால் சாயிபாபாவின் பொதுத் தொண்டுகள் அவரது மதிப்பை மக்கள் மனதில் மேலும் உயர்த்தியுள்ளன.

*சமூகத் தொண்டு*

ஆந்திராவில் உள்ள அனந்தபூர் மாவட்டத்தில் நிலவிய கடுமையான குடிநீர் பஞ்சம், பாபாவின் ரூ.200 கோடி திட்டத்தால் முடிவுக்கு வந்தது. அம்மாவட்டத்திலுள்ள 50 லட்சம் மக்கள் இன்றும் பயனடைகின்றனர். இத்திட்டம் 9 மாதங்களில் முடிக்கப்பட்டது. 2 ஆயிரத்து 500 கி.மீ. தூர குழாய்கள், 268 தண்ணீர் தொட்டிகள், 124 நீர்த்தேக்கங்கள், 200 நீரேற்று நிலையங்கள் ஆகியன 700 கிராமங்களுக்கும் 11 நகரங்களுக்கும் பயனளிக்கின்றன.


இத்திட்டத்துக்கு ரூபா 30 கோடி நிதியளிக்க மத்திய அரசு முன்வந்தபோதும் பாபா மறுத்து விட்டார். அவரது 70 ஆவது பிறந்த நாளில் இத்திட்டம் செயலுக்கு வந்தது.

சத்ய சாயி அமைப்பு ஏராளமான இலவச கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மூலம் சேவை செய்கிறது. உலகளவில் 114 நாடுகளில் 1,200 சத்ய சாயிபாபா மையங்கள் இயங்குகின்றன. தமிழகத்தின் தலை நகரான சென்னையின் குடிநீர் தாகத்தைப் போக்கும் வகையில் கிருஷ்ணா நதி நீரை தெலுங்கு கங்கை திட்டத்தின் மூலம் கொண்டுவர நிதியுதவி வழங்கினார்.

அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய், எல்லோருக்கும் உதவு, எவரையும் வெறுக்காதே இதுவே பகவான் சத்யசாயிபாபாவின் தாரக மந்திரம்.

*பொன் மொழிகள்*


- அன்பு வழியில் ஆண்டவனின் பக்தியில் ஈடுபடுங்கள். உங்கள் குழப்பம் யாவும் மறைந்து விடும்.
- படிப்பில் மட்டுமின்றி, நமது நாடு, மொழி, மதம் மீதும் பற்றும் மரியாதையும் கொள்வது அவசியம். இதுவே நமக்கு நம்பிக்கையை வளர்க்கும்.
- சோதனைகளை மனிதன் விரும்பி ஏற்க வேண்டும்.
- தயாராக இருக்கும் மொட்டுகள் தான் மலரும் மற்றவை பொறுமையாகக் காத்திருக்க வேண்டும்.
- உண்மை, தர்மம், கருணை, மன்னிக்கும் மனப்பான்மை, இவற்றை பெறவேண்டுமானால் ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குள் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.
- மனதை - தூய்மையாக - முழுமையாக வைத்துக் கொள். வெற்றி பெறுவாய்.



*பாபாவின் சேவைகள்...*

- பாபாவின் ஆசிரமத்திற்கு அருகில் 2 கிலோமீற்றர் தொலைவில் முதியோருக்காக விருத் தாஸ்ரமம் என்ற ஒன்று கட்டப்பட்டுள் ளது. இங்கு முதியவர்களுக்கு தேவையான வசதிகள் சிறபபாக செய்யப்பட்டுள்ளன.
- பாபா குறித்த நூல்கள், சிடிக்கள் என அனைத்தும் ஆசிரம வளாகத்திலேயே விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.
- பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக சத்யசாயி கோகுல ஆசிரமத்தில் 240 அறைகள் உள்ளன. இங்கு கட்டணமாக நாள் ஒன்றுக்கு ரூபாய் 150 மட்டும் வசூலிக்கப்படுகின்றது.
- உலக அமைதி மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தி பாபா அவர்கள் புட்டபர்த்தி மட்டுமல்லாமல் கர்நாடக மாநிலம் முழுவதும் பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி வந்தார்.
- ஒயிட்பீல்டு ஆசிரமத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சத்யசாயி மருத்துவமனையில் 100 இறகும் மேற்பட்ட படுக்கைகளுடன் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு முற்றிலும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- இதேபோன்று, சத்யசாயி இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸ் மருத்துவமனையின் உதவியுடன் இதயம் மற்றும் நரம்பு தொடர்பான கொடிய நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மொத்தம் 52 ஏக்கரில் இம்மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 333 படுக்கைகள், 12 அறுவை சிகிச்சை கூடங்கள், ரத்தவங்கிகள், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன.
- பாபாவின் ஆசிரமத்திற்கு அருகில் 2 கிலோமீற்றர் தொலைவில் முதியோருக்காக விருத்தாஸ்ரமம் என்ற ஒன்று கட்டப்பட்டுள்ளது. இங்கு முதியவர்களுக்குத் தேவையான வசதிகள் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன.

# 32 வருட கால ஆட்சியிலிருந்து விலகுகிறார் ஏமன் ஜனாதிபதி



(சானா)

ஏமன் நாட்டின் அதிபர் பதவியிலிருந்து விலகுவதாக அதிபர் அலி அப்துல்லா சலேஷ் தெரிவித்துள்ளார். வளைகுடா நாடுகளின் ஆலோசனையின் படி இம்முடிவை எடுத்திருப்பதாக அவர் தெரிவித்தார். இதன்மூலம் தான்வகித்து வந்த பொறுப்புகள் அனைத்தும் துணை அதிபரிடம் ஒப்படைப்பதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் 32 ஆண்டு காலமாகப் பதவி வகித்து வந்த சலேஜின் ஆட்சி முடிவுக்கு வருகிறது. அதிபர் பதவி விலகக் கோரி கடந்த 30 நாட்களுக்கும் மேலாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வந்தது. போராட்டத்தில் சுமார் 120 பேர் வரை கொல்லப்பட்டனர்.

அதிபரின் பதவி விலகல் முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது. பதவி விலகல் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஏமன் எதிர்கட்சித் தலைவர் யாசின் நோமன் உடனடியாக தேசிய ஐக்கிய அரசு பதவி ஏற்க இயலாது என்று தெரி வித்துள்ளார்.

பதவி இழந்த டுனிஷியா அதிபர் ஜினி அல் அபிதினி பென் அலி, எகிப்து அதிபர் ஹோசினி முபாரக் வரிசையில் தற்போது ஏமன் அதிபரும் இணைந்துள்ளார். ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் ஏமன் அதிபர் பதவி விலக ஒப்பந்தங்கள் செய்திருந்தன.

அதன்படி துணை அதிபரிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது, இடைக்கால அரசு மூலம் அதிபர் தேர்தலை நடத்துவது, அதிபர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு உரிய பாதுகாப்பு அளிப்பது போன்ற ஒப்பந்தங்கள் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் அதிகரிக்கும் மனித உரிமை மீறல் அமெரிக்க அதிகாரிகள் அடுத்தவாரம் பேச்சு

(வொஷிங்டன்)

சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவது குறித்து, அமெரிக்காவும், சீனாவும் அடுத்த வாரம் பேச்சு வார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளன. சீனாவில், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக யார் போர்க்கொடி தூக்கினாலும் அவர்களின் கதி அதோ கதி தான். அரசுக்கு எதிராகப் போராடியவர்கள். பலர் காணாமல் போய்விட்டனர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் பலர் தண்டனை பெற்றுள்ளனர்.

இதுகுறித்து, சர்வதேச நாடுகள் பலமுறை கண்டனம் தெரிவித்துள்ளன. எனினும் சீனா அதைக் கண்டு கொள்ளாமல், தனது மனித உரிமை மீறல்களை நடத்தி வருவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. சீனாவின் பிரபல ஓவியக் கலைஞரான அய்(53) தற்போது சிறையில் உள்ளார். இதனால், சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவது குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.இதுகுறித்து, இம்மாதம் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் பேச்சு வார்த்தை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கு சீனாவும் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

# லெனின் சிலை அகற்றப்பட்டது

(தஜிகிஸ்தான்)

கம்யூனிஸ்ட்டு ஆட்சிகாலத்தில் ரஷ்யாவின் அங்கமாக இருந்தது தஜிகிஸ்தான். கம்யூனிஸ்ட்டுகள் வீழ்ச்சி அடைந்ததும், ரஷ்யாவில் இணைந்து இருந்த பல்வேறு சிறிய நாடுகள் பிரிந்து விட்டன. அப்படிப் பிரிந்த நாடுகளில் ஒன்று தஜிகிஸ்தான். இந்த நாட்டில் உள்ள நகரம் குஜாண்டு. இதன் பழைய பெயர் லெனினாபாத்.

இந்த நகரின் மையப்பகுதியில் கம்யூனிஸ்ட்டு ஆட்சியின் தந்தையான லெனினின் 74 அடி உயர சிலை இருந்தது. இந்தச் சிலையை தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் இடித்துத் தள்ளினார்கள்.

நேற்றுமுன்தினம் லெனினின் 141 ஆவது பிறந்த தினம் ஆகும். இதையொட்டி ரஷ்யாவில் மொஸ்கோ நகரில் உள்ள செஞ்சதுக்கத்தில் அவரது சமாதிக்கு நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்ட்டுகள் மலர்களை வைத்து அஞ்சலி செலுத்திய நிலையிலேயே தஜிகிஸ்தானில் இந்தச் சிலை இடித்து அழிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ராணுவத் தளபதியினது பிறந்த ஆண்டில் ஏற்பட்ட சர்ச்சை

## ஓய்வு பெறும் நாளை அறிவிப்பதிலும் சிக்கல்

(புதுடில்லி)

ராணுவத் தளபதி வி.கே.சிங் தொடர்புடைய ராணுவ ஆவணங்களில், அவரது பிறந்த நாளாக, இரண்டு வெவ்வேறு நாட்கள் குறிப்பிடப்பட்டுள்ளது, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதனால், அவர் ஓய்வு பெறும் நாளை முடிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்திய ராணுவத் தளபதியாக, கடந்தாண்டு மார்ச் மாதம் வி.கே.சிங் பதவியேற்றார். தற்போது இவரது பிறந்த நாளை மையமாக வைத்து, பெரும் சர்சசை எழுந்துள்ளது.

ராணுவ அலுவலகங்களில் உள்ள இவ ரது பணி விவரம் தொடர்பான ஆவணங்களில், இவரது பிறநத நாளாக, இரண்டு வெவ்வேறு நாட்கள் குறிக்கப்பட்டுள்ளன.

ராணுவ துணைத் தளபதி பிரிவு அலு வலகத்தில் (ஏ.ஜி.,) உள்ள ஆவணத்தில், வி.கே.சிங்கின் பிறந்த நாள், 1951 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி, எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்; ராணுவச் செயலக அலுவலகத்தில் உள்ள ஆவணத்தில், வி.கே.சிங்கின் பிறந்த நாளாக 1950ம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விவகாரம், 2006 ஆம் ஆண்டில் வெளிசசத்துக்கு வந்தது. ஆவணங்களில் வி.கே.சிங்கின் பிறந்த நாளாக, இரண்டு வெவ்வேறு நாட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதை, ராணுவச் செயலக அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இது தொடர்பாக, அப்போதே வி.கே.சிங்கிடம் விளக்கம் கேட்கப்பட்டது.

அதற்கு அவர், 1951 ஆம் ஆண்டு தான், தனது உண்மையான பிறந்த நாள் என, விளக்கமளித்தார்.

தேசிய ராணுவ அக்கடமியில் சேருவதற்கான விண்ணப்பம், ராணுவ அக்கடமியில் பயிறசி முடித்ததற்காக அளிக்கப்பட்ட சான்றிதழ் ஆகியவற்றில் வி.கே.சிங், 1950 ஆம் ஆண்டு பிறந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்டபோது, எழுத்து மூலமாக அவர் அளித்த பதிலில் கூறப்பட்டதாவது -

தேசிய ராணுவ அக்கடமியில் சேருவதற்கான யு.பி.எஸ்.சி., விண்ணப்பத்தில், எனது பிறந்த ஆண்டு 1950 ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் படித்த பள்ளியின் எழுத்தர் அளித்த விவரத்தின் அடிப்படையில், இந்த விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டது. அது தவறான திகதி. இவ்வாறு அதில் அவர் தெரிவித்திருந்தார்.

மேலும், இது தொடர்பாக அவர் கூறுகையில் -

எனது பிறந்த திகதியில் உள்ள குழப்பத்தை சரி செய்வதற்காக இரண்டு முறை முயற்சித்தேன். ராணுவப் பணியில் சேர்ந்து, இரண்டு ஆண்டுகளுக்குள் மட்டுமே பிறந்த திகதி உள்ளிட்ட விவரங்களை மாற்ற முடியும் என்றும், இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டால், திகதியை மாற்றுவதற்கு ராணுவ விதிமுறைகள் அனுமதிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டது. எனவே, இந்த விவகாரத்தில் எந்த மாற்றமும் செய்ய முடியவில்லை என்றார்.

இதற்கிடையே 2008 இல், தான் 1950 ஆம் ஆண்டில் பிறந்ததாக ஒப்புக்கொண்டு, அது தொடர்பாக ராணுவச் செயலகத்துக்கு எழுத்து மூலம் அவர் பதில் அளித்ததைத் தொடர்ந்து, இந்த விவகாரம் முடிவுக்கு வந்தது.



இந்நிலையில், கடந்தாண்டு வி.கே.சிங் ராணுவத் தளபதியாக பதவியேற்றதும், மீண்டும் இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்தது. ராணுவ அமைச்சகம் சார்பில், இது குறித்த சட்ட அமைச்சகத்திடம் கருத்துக் கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த சட்ட அமைச்சகம், வி.கே. சிங் அளித்த பள்ளி இறுதிச் சான்றிதழில், அவரது பிறந்த ஆண்டு 1951 என குறிப்பிடப்பட்டுள்ளதால், அதையே அவர் பிறந்த ஆண்டாக கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என, தெரிவித்தது. சட்ட அமைச்சகத்தின் இந்தக் கருத்தை, ராணுவ அமைச்சகம் ஏற்றுக்கொள்ளுமானால், வி.கே. சிங், வரும் 2013 மார்ச் மாதம் வரை, ராணுவத் தளபதியாக பதவியில் நீடிப்பார். இல்லையெனில், வரும் மே மாதம் 2012 இல் ஓய்வு பெறுவார்.

இதுகுறித்து ராணுவ அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், இது மிகவும் முக்கியமான விடயம்.

ராணுவத்தின் மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்க வேண்டும். இந்த விவகாரத்தில் இறுதி முடிவு எடுக்கும்போது, அனைத்து விதமான சாத்தியக்கூறுகளையும், ஆவணங்களையும் அலசி ஆராய வேண்டும் என்றார்.


# 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு வழக்கில் முழு ஆவணங்களைக் காட்டவில்லை

## முன்னாள் அமைச்சர் ராசா மனுத்தாக்கல்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடரபான வழக்கில், சி.பி.ஐ.,யால் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் முழுமையானதாக இல்லை என, டில்லி நீதிமன்றில், முன்னாள் மத்திய அமைச்சர் ராசா உள்ளிட்டோர் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டு முறைகேடு வழக்கில், மத்திய தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ராசா, யுனிடெக் ஒயர்லெஸ் (தமிழகம்) பிரைவேட் லிமிடெட் மேலாண்மை இயக்குநர் சஞ்சய் சந்திரா, சுவான் டெலிகாம் புரமோட்டர் ஷாகித் உஸ்மான் பல்வா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இந்நிலையில், ராசா, சஞ்சய் சந்திரா, ஷாகித் பல்வா ஆகியோர் சார்பில் டில்லி சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதில், சி.பி.ஐ.,யால் எங்களுக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் முழுமையானதாக இல்லை.

எனவே, விடுபட்ட ஆவணங்களை வழங்கும்படி சி.பி.ஐ.க்கு உத்தரவிட வேண்டும் என, தெரிவிக்கப்பட்டு இருந்தது. இதை விசாரித்த நீதிபதி, மூன்று பேருக்கும் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள், விடுபட்ட ஆவணங்களை வழங்க வேண்டும் என, சி.பி.ஐ.க்கு உத்தரவிட்டார்.




# ஆளும் கட்சிகள் அதிகாரம் இழக்கும்



(சென்னை)

ஆளுங்கட்சிகள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை இழக்கும்: சட்டசபை தேர்தல்களில் ஆளுங்கட்சிகள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை இழக்கும் என, வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய பாரதீய ஜனதா கட்சியின் முன்னாள் அகில இந்தியத் தலைவர் வெங்கையா நாயுடு எம்.பி., புதுச்சேரி ஆளுநரை மத்திய அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும். நடந்து முடிந்துள்ள சட்டசபைத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி, மேற்கு வங்காளம், கேரளா ஆகிய மாநிலங்களில் ஆளுங்கட்சிகள் தங்கள் ஆட்சி அதிகாரத்தை இழக்கும் என்றார்.

# அகதி முகாமில் நகை, பணம் கொள்ளை ஒரு வருடத்தின் பின்னரே வழக்குப் பதிவு



(திருமங்கலம்)

திருமங்கலம் அருகே உள்ள இலங்கை அகதிகள் முகாமில் நகை-பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்ற மர்ம ஆசாமிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

திருமங்கலம் அருகேயுள்ள உச்சப்பட்டியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு 300-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்த முகாமில் கடந்த 10 ஆம் திகதியன்று சிவராஜ் (வயது40) என்பவரின் வீட்டில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு அதில் இருந்த 7 பவுண் நகை மற்றும் ரூ.20 ஆயிரம் ரொக்கம் ஆகிய வற்றை மர்ம ஆசாமிகள் கொள்ளையடித்து சென்றனர்.

இதுகுறித்து அப்போதே சிவராஜ் உயர் அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தார்.

ஆனால் இந்த கொள்ளைச் சம்பவம் சம்பந்தமாக பொலிஸார் உரிய வழக்குப் பதிவு செய்யாமல் இருந்தனர்.

இந்நிலையில் தற்போது உயர் அதிகாரிகளின் ஆலோசனைப்படி திருமங்கலம் நகர பொலிஸ் சப்-இன்ஸ் பெக்டர் ரெங்கநாதன் மேற்கண்ட கொள்ளைச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்தார்.

மேலும் நகை, பணத்தைக் கொள்ளையடித்து சென்ற மர்ம ஆசாமிகளைத் தேடி வருகின்றனர். ஒரு வருடத்துக்குப் பிறகு வழக்குப்பதிவு செய்தது விநோதத்தை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாட்டில் ஒருலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் திட்டமிட்டுள்ளாராம் விக்ரம்

(சென்னை)

தமிழ்ப் பட உலகின் முன்னணி கதாநாயகர்களில் ஒருவரான விக்ரம் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் ஹபிடேட் என்ற அமைப்பின் இளைஞர் பிரிவு தூதுவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதன் 23 ஆவது நிர்வாகக் குழு கூட்டம் கென்யா நாட்டின் தலைநகரான நைரோபியில் நடநதது. அதில் கலந்து கொண்டுவிட்டு சென்னை திரும்பிய விக்ரம் கூறியதாவது -

ஐக்கிய நாடுகள் சபையின் ஹபிடேட் தூதுவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன்.

இந்தச் சமுதாயம் எனக்கு நிறையத் தந்திருக்கிறது. எனக்கு ஒரு பொறுப்பு வந்திருக்கிறது. அதற்காக சமுதாயத்திற்கு நான் ஏதாவது செய்தாக வேண்டும்.

இதற்காக பச்சைப்புரட்சி என்ற அமைப்பை நான் தொடங்கியிருக்கிறேன். இந்த அமைப்பின் மூலம் என் ரசிகர்களை பயன்படுத்தி தமிழ்நாடு முழுவதும் 1 லட்சம் மரங்களை நடுவதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்.

சென்னை நந்தனத்தில் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் முதற்கட்டமாக 100 செடிகள் நடப் பட்டு இருக்கிறது.

இதற்காக ஒரு குழுவை உருவாக்கியிருக்கிறோம். அதில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும், நண்பர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இதையடுத்து கற்க கசடற என்ற அமைப்பையும் தொடங்க இருக்கிறேன். இதன் மூலம் குடிசைப்பகுதிக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கல்வி அறிவை வளர்க்க விரும்புகிறேன்.

நான் படங்களில் மொட்டை போட்டால் என் ரசிகர்களும் அதேபோல் மொட்டை அடித்துக் கொள்கிறார்கள். நான் குறுந்தாடி வைத்தால் அவர்களும் குறுந்தாடி வைத்துக் கொள்கிறார்கள்.



காசி படத்தில் நான் கண் பார்வையற்றவனாக நடித்தபோது கண்தானம் செய்வதாக அறிவித்தேன். என்னுடன் ஆயிரம் ரசிகர்களும் கண் தானம் செய்தார்கள். அந்த நிகழ்ச்சி என்னைப் பிரமிக்க வைத்தது.

எனவே பச்சைப்புரட்சி இயக்கத்தில் என் ரசிகர்களை ஈடுபடுத்த விரும்புகிறேன். தமிழ்நாடு மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளாவிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த முடிவு செய்திருக்கிறேன் என்றார்.

# டெங்குக் காய்ச்சலால் இதுவரை 32 பேர் மரணம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியினுள் டெங்குக் காய்ச்சல் காரணமாக 32 மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்தது.

இந்தக் காலப்பகுதியினுள் டெங்குக் காய்ச்சலால் மூவாயிரத்து 784பேர் பீடிக்கப்பட்டதாகப் பதிவாகியுள்ளது.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் இதுவரை 716 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்தது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்களும், டெங்கு மரணங்களும் பதிவாகியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளக பருவப் பெயர்ச்சி மழை பெய்ய ஆரம்பித்துள்ள நிலையில் டெங்குக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயமும் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# பாடசாலை நேரத்தில் மாணவர்களை தடுத்துவைத்திருந்தால் நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் பாடசாலை நேரத்தில் மாணவர்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இன்றுமுதல் பாடசாலைகளில் இரண்டாவது தவணைக்காலம் ஆரம்பமாகும் நிலையில் இந்த நடைமுறையை அமுல்படுத்தவுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை நேரங்களில் அவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களில் மாணவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர்கள் பலதரப்பட்ட இன்னல்களுக்கு முகம்கொடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமக்கு அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அனோமா திசாநாயக்க தெரிவித்தார்.

# மேலும் நான்கு கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 மின்சார திட்டங்கள் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டன. செல்வபுரம், சிலாவத்தை, உப்புமாவெளி மற்றும் முள்ளியவளை பகுதிகளிலேயே இத்திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இதற்கான நிதியினை அமைச்சர் றிசாத் பதியுதீன் பெற்றுக் கொடுத்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட மின் விநியோகத் திட்டத்துக்கென 379 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். இதேவேளை மின்சாரமில்லாத கிராமங்களுக்கான மின்சாரத்தை பெற்றுக் கொடுக்கும் பணியை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சதாசிவம் கனகரத்தினம், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பத்திநாதன், பிரதேச செயலாளர் தயானந்தா, அமைச்சரின் இணைப்பு செயலாளர்கள் மற்றும் ஜெனரல் சஹீர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# தேசியப் பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் அரசாங்கம் விரைந்து செயற்படவேண்டும்

## ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

**தேசிய பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கம் விரைவாக தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்கவேண்டும். 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்கின்றதா? அல்லது இல்லையா? என்பது முக்கியமல்ல. அரசாங்கம் உடனடியாக தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதே முக்கிய தேவையாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சியின் பிரதி பிரதம அமைப்பாளருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.**

மேலும் பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கை விடயத்தில் அரசாங்கம் இராஜதந்திர ரீதியாக செயற்படவேண்டும். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் எமது கட்சியினர் என அனைவரும் ஒன்றிணைந்து பான் கீ மூனுடன் பேச்சுநடத்தவேண்டும். ஆனால் அதற்கு முன்னர் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும் என்றும் தயாசிறி எம்.பி. குறிப்பிட்டார். பான் கீ மூனின் குழுவின் அறிக்கை வெளியிடப்படக்கூடாது என்று அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளமை மற்றும் ஆளும் தரப்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான பேச்சுவார்த்தை என்பன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயங்கள் குறித்து அவர் மேலும் கூறியதாவது, யுத்தம் முடிவடைந்துள்ள நிலையிலும் அரசாங்கம் இதுவரை தேசிய பிரச்சினை விடயத்தில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்காமல் இருக்கின்றது. பல தரப்பினர் இது தொடர்பில் வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் அரசாங்கம் எவ்வாறான தீர்வை முன்வைக்கப்போகின்றது என்பது தொடர்பில் எந்த அறிவிப்புக்களும் இல்லாமல் உள்ளது. எனவே, அரசாங்கம் விரைவில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்கவேண்டியது அவசியமாகும். தற்போது அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றது. எனவே, விரைவில் அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று தொடர்பில் அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியமாகும். இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கை விடயத்தில் அரசாங்கம் மிகவும் இராஜதந்திரமாக செயற்படவேண்டியது முக்கியமாகும். அதாவது உள்நாட்டில் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவது போன்று ஐக்கிய நாடுகள் சபையுடன் செயற்பட முடியாது. பான் கீ மூனின் குழுவின் அறிக்கை விடயத்தில் நாங்கள் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் எமது கட்சியினர் என அனைவரும் ஒன்றிணைந்து பான் கீ மூனுடன் பேச்சு நடத்தவேண்டும். மாறாக ஆர்ப்பாட்டம் நடத்துவது எந்தளவு தூரம் வெற்றி பெறும் என்பது குறித்து சிந்திக்க வேண்டும். ஆனால் இவ்வாறு கேள்வியெழுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு இடம் வைக்காமல் எமது பிரச்சினைகளை நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

# எச்.ஐ.வி தொற்று குறித்த பரிசோதனை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

எச்.ஐ.வீ தொற்று குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் இதுவரை எச்.ஐ.வீ வைரஸ் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் எச்.ஐ.வீ தொற்றுக்குள்ளான சுமார் மூவாயிரம் பேர் இதுவரை மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் அந்த எண்ணிக்கை சரிவர உறுதி செய்யப்படவில்லை என சுகாதார அமைச்சு கூறுகின்றது.

இதற்கமைய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியாக இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் நாட்டில் சுமார் 40,000 பெண்கள் விபசாரத்தில் ஈடுபட்டிருப்பதுடன் இவர்களில் ஒருவர் தினமும் ஐந்து பேருடனாவது விபசாரத்தில் ஈடுபடுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை போதைப்பொருள் பாவனைக்கும் சுமார் 40 ஆயிரம் பேர் அடிமையாகியுள்ளார்கள் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரண்டு தரப்பினரும் வெகுவாக எயிட்ஸ் தொற்றுக்கு இலக்காகும் அபாயம் காணப்படுவதாக தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் மதிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையை விடக் கூடுதலானோர் எச்.ஐ.வீ தொற்றுக்கு இலக்காகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இது தவிர சுற்றுலாத் துறையின் வளர்ச்சியுடன் எயிட்ஸ் தொற்றக்கூடிய வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# ஜனாதிபதியின் பெயர் நீக்கம் குறித்து ரைம்ஸ் சஞ்சிகை விளக்கவேண்டும்

## கோரிக்கை விடுக்கிறது ஹெலஉறுமய

(கொழும்பு)

உலகின் செல்வாக்கு மிக்கவர்கள் பட்டியலிலிருந்து ஜனாதிபதியின் பெயர் நீக்கப்பட்டமை தொடர்பில் ரைம்ஸ் சஞ்சிகையின் ஆசிரியர் குழாம் விளக்கமளிக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி வலியுறுத்தியுள்ளது.

இணைய கருத்துக் கணிப்பின் அடிப்படையில் முதல் பத்து நிலைகளில் இடம்பிடித்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் இறுதி நேரத்தில் நீக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் பின்னணியில் சூழ்ச்சி இருக்கலாம் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

இணைய கருத்துக் கணிப்பின் போது ஜனாதிபதி நான்காம் நிலையில் காணப்பட்டதாகவும், இதனையிட்டு இலங்கையர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்ன காரணத்திற்காக ஜனாதிபதியின் பெயர் நீக்கப்பட்டது என்பது தொடர்பில் ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் குழாம் விளக்கமளிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

சில மேற்குலக நாடுகளும், புலிகளின் ஆதரவாளர்களும் ஜனாதிபதியின் பெயர் நீக்கப்பட்டமையின் பின்னணியில் செயற்பட்டிருக்கலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வடக்கு - தெற்கு உறவு விருத்திக்கு இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்

(சாவகச்சேரி)

இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் திட்டத்தின் கீழ் மாத்தறையில் இருந்து வருகைந்த இளைஞர் குழுவிற்கான கௌரவிப்புவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.விமலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு, யாழ்.மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர சேவைமன்றப் பணிப்பாளர் லலித் பியூட் பெரேராவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சகலகலாவல்லி வித்தியாலய அதிபர் வை.ஜெயகாந்தன், யாழ். மாவட்ட தேசிய சர்வமத சமாதானப்பேரவை இணைப்பாளர் ஜெ.தர்மராஜா, தேசிய இளைஞர் சேவைமன்றப் பணிப்பாளர் சபை உறுப்பினர் தே.அன்றோ டினேஸ்சு ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (11)

# கொழும்பில் மே தின நிகழ்வுகளில் வடக்கு – கிழக்கு தொழிலாளர்கள்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் கொழும்பில் இடம்பெறவுள்ள மே தின நிகழ்வுகளில் வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும கலந்துகொள்வர் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இந்த வருட மே தினத்தில் 3 லட்சத்திற்கும் அதிகமானவர்கள பங்குகொள்வர் என தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் உரையாற்றவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# யாழ்.முஸ்லிம் மக்களுக்கு புதிய வீட்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேறியுள்ள யாழ். முஸ்லிம் மக்களுக்கான நிவாரணம், நிதி, வீட்டுத்திட்ட உதவிகள் ஆகியவைகள் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கையளித்துள்ளோம். விரைவில் இவர் களுக்கான நிவாரண உதவிகள், வழங்கப்படும் என யாழ்.பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கூறினார்.

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் டாக்டர் ரம்ஸி தலைமையில் மீள்குடியேறியுள்ள 20 பேருக்கு வீடு வழங்குவதற்கான தெரிவு நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதேச செயலாளர் தொடர்ந்து உரையாற்றும்போது,

எம்.எப்.சி.டி (MFCD) என்ற முஸ்லிம் நிறுவனம் 10 முழு வீடும் 10 அரைவீடும் நிர்மாணிப்பதற்கு முன்வந்துள்ளது என்றும், எமது கிராம அதிகாரிகளின் ஆலோசனையும் பெற்று பயனாளிகளைத் தெரிவுசெய்யும் இந்நிகழ்வு பாராட்டக்கூடியதாகும் எனவும் கூறினார்.

இந்நிகழ்வில் பயனாளிகள் 60 பேர் வருகைதந்திருந்தார்கள். இவர்களுடன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் அஷ்ஷேக் சுகைப் காரியப்பன் பயனாளிகளைத் தெரிவு செய்யும் விடுமுறைகளைப் பொது மக்களுக்கு விளக்கினார்.

இந்நிகழ்வில் J/80, J/86, J/87 கிராம அலுவலர்கள், பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர்களான எம்ஏ.ஸி.முபீன், எம்நியாஸ் உஹாஜிம் கலந்துகொண்டனர். 60இற்கும் மேற்பட்ட மீள்குடியேறியுள்ள முஸ்லிம் குடும்பத் தலைவர்கள் பயனாளிகளாக வருகைதந்தனர். (19)

# அமைச்சருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த நபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கிராமிய விவகாரங்கள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரத்னவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சந்தேக நபரொருவர் மாவனல்லையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரத்னவுக்கு கொலை அச்சுறுத்தலை விடுத்த சந்தேக நபர் மாவனல்லைப் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் என்பது விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

நேற்றுமுன்தினம் சந்தேக நபர் மாவனல்லைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்ததுடன், எதிர்வரும் நான்காம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மாவனல்லையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வைத்து சந்தேக நபர் தன்மீது கொலை அச்சுறுத்தல் விடுத்திருந்ததாக அமைச்சர் அதாவுத செனவிரத்ன மேற்கொண்டிருந்த முறைப்பாட்டிற்கமையவே சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற ஈஸ்ரர் திருப்பலியின் பின்னர் உயிர்த்த ஆண்டவரின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டது. இதில் பீடப்பணியாளர்கள் முன்னே செல்வதையும், ஆண்டவரின் திருச்சொரூபம் எடுத்து வருவதையும், கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம் (21)

# குட்டையைக் குழப்பி வேடிக்கை பார்ப்பது நவீன அரசியல் தந்திரோபாயமா?

## அராலி மக்கள் கேள்வி கேட்கின்றனர்

(அராலி)

அராலியிலுள்ள ஊரத்திக் கிராமத்தில் செயற்பட்டுவந்த கள்ளுத்தவறணை தற்போது இயங்காமல் உள்ளதால் தற்போது அப்பகுதியில் சட்டவிரோதகள் விற்பனை அதிகரித்துள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் படியும், சட்டபூர்வமான முறையில் கள் விற்பனை நிலையத்தினை மீண்டும் ஆரம்பிக்கும் படியும் அப்பகுதிப் பொதுமக்களின் பிரதிநிதிகள் வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த வேண்டுகோளை பரிசீலனை செய்ய மேற்படி குழு இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே களநிலை ஆய்வு ஒன்றினைச் செய்திருந்தது. இதற்காக ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சந்திரகுமார், மதுவரி உத்தியோகத்தர், கூட்டுறவு ஆணையாளர், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் அப்பகுதிக் கிராம அலுவலர் உட்பட அப்பகுதியில் செயற்படும் கிராமிய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோர் குறிப்பிட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வினை மேற் கொணடனர். இதன்படி விற்பனை நிலையத்தினை அமைப்பதற்கான பொருத்தமான காணித்துண்டொன்றைத் தெரிவுசெய்யும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இம்முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப்போயின. இறுதியில் மேற்படி கள் விற்பனை நிலையத்திற்குச் சொந்தமான காணியில் இந்த நிலையத்தினை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களும், அப்பகுதி பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கமும் நடவடிக்கையில் இறங்கின.

இதுவும் பொது நலனிற்கு உசிதமற்றதாகத் தென்பட்டதைத் தொடர்ந்து ஈ.பி.டி.பி கட்சியின் வலிகாம் பகுதிப் பொறுப்பாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய தற்காலிகமாக மேற்படி முயற்சியும் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் அண்மையில் அப்பகுதிக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவான் அப்பகுதியைச் சேர்ந்த சிலர் மத்தியில் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக இணையத்தளங்களிலும் தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, அராலியில் உள்ள ஊரத்திக் கிராமத்தில் ஈ.பி.டி.பி. கள்ளு தவறணை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று இணையத்தளங்களில் வெளியான செய்தியை ஈ.பி.டி.பி கட்சியின் வலிகாமப் பகுதிப் பொறுப்பாளர் திரு.எஸ். பாலகிருஸ்ணன் (ஜீவன்) முற்றாக மறுத்துள்ளார்.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே நாம் உழைத்து வருகின்றோம். கள்ளு தவறனை அமைக்கும் வேலை எமக்கு உரியதல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் நடத்தப்படும் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு விழாவும் விளையாட்டு விழாவும், இன்று பி.ப. 2 மணிக்கு யாழ்நகர் மேற்குச் சமுர்த்தி வங்கிச் சங்க சதுக்கத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ் பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரன் பிரதம விருந்தினராக் கலந்துகொள்ளவுள்ளார். (கா)


# 8 வருடங்களாக ஒரே இடத்தில் பணியாற்றும் தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

ஒரே இடத்தில் 8 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் தேசிய பாடசாலை ஆசிரியர்கள் மே மாதம் முதல் இடமாறறப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் 340 தேசிய பாடசாலைகள் உள்ளன. சிலர் ஒரே இடத்தில் 22 வருட காலமாகவும் தேசிய பாடசாலையில் கடமையாற்றி வருகின்றனர். அவர்களை மே மாதம் முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

அவர்கள் விரும்பினால் அருகிலுள்ள மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைக்கு மாறலாம். அதேபோல் புதிய இடமாற்றக் கொள்கையின் கீழ், மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களும் தேசிய பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். புதிய இடமாற்றத் திட்டம் முதலில் தென் மாகாணத்தில் அமுல்படுத்தப்படும். இரண்டாவதாக மேல் மாகாணத்திலும் அதையடுத்து ஏனைய மாகாணங்களிலும் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.



# தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோருக்கு சலுகைக் கட்டணத்தில் விமானச் சீட்டுக்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் இலங்கையர்களுக்கு விமானப் பயணச் சீட்டைகளை வழங்கும் பயண முகவர் நிலையமொன்றை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பித்துள்ளது.



வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுச்செல்லும் இலங்கையர்களுக்கு சலுகைகளை விரிவுபடுத்தும் மகிந்த சிந்தனை திட்டத்துக்கமைய எஸ்.எல்.பீ.எப்.ஈ. ட்ரெவல்ஸ் என்ற பெயரில் பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் பயண முகவர் நிலையம் திறக்கப்பட்டதாக பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார்.


பணியகத்தில் பதிவு செய்த பின்னர், அங்கேயே விமான டிக்கெட்டுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் இந்தப் பயண முகவர் நிலையம் இயங்க ஆரம்பிக்கும். குறைந்த கட்டணத்தில் விமான டிக்கட்டுகள் வழங்கப்படுவதுடன், இதன் நன்மைகள் வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்பவர்களுக்கு நேரடியாகக் கிடைக்க வழி வகை ஏற்படும்.

சிறிலங்கன் எயார்வேஸ், எமிரேட்ஸ் கட்டார் எயார்வேஸ், ஓமான் எயார்வேஸ், மிஹின் லங்கா உட்பட்ட விமான டிக்கட்டுக்களை இங்கு பெற்றுக் கொள்ள முடியும்.

அமைச்சர் டிலான் பெரேராவின் ஆலோசனைக்கமைய இப்புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# ஐ.நா.அறிக்கை தொடர்பில் தேசிய ரீதியில் நடவடிக்கை

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் இலங்கை தொடர்பான ஆலோசனைக்குழு முன்வைத்த அறிக்கை தொடர்பில் தேசிய ரீதியில் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிவித்தலை ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் புலிகளின் குறிப்பிடத்தக்க பலம் செயற்படுத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. அறிக்கைக்கு ராஜதந்திர ரீதியில் மாத்திரம் பதில் அளிக்க முடியாது

## தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு வெளியிட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கைக்கு ராஜதந்திர மட்டத்தில் மாத்திரம் பதில் அளிக்க முடியாது என தேசிய சுதந்திர முன்னணி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. குழுவின் அறிக்கைக்கு எதிராக நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.முசாமில் தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக தமது கட்சி ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். மே தினத்திற்குப் பின்னர், ஆலோசனைக் குழுவின் அறிக்கைக்கு எதிராக நாடளாவிய ரீதியாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கு தேசிய சுதந்திர முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ்.குடாவில் 60 வீதமான நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன




(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் 60 வீதமான நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி யாழ்.குடாநாட்டில் 51, 503136 சதுர நிலப் பரப்பில் கண்ணிவெடிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில் 31263216 சதுர நிலப் பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதைவிடத் தற்போது 20, 239920 சதுர நிலப்பரப்பில் உள்ள கண்ணிவெடிகள் தற்போது அகற்றப்பட்டு வருகிறது. அத்துடன், 17333729 சதுர நிலப் பரப்பு கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசமாகக் காணப் படுகிறது.

இதுவரை கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து 89 ஆயிரத்து 678 மிதிவெடிகள், 152 டாங்கி எதிர்ப்புக் கண்ணிவெடிகள், 91 ஆயிரத்து 386 வெடிக்காத வெடிபொருட்கள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதாக மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

# டெங்கு வைரஸ் நோய்த் தாக்கம் கொழும்பு மாவட்டத்தில் தீவிரம்


(கொழும்பு)

டெங்கு நோயின் பாதிப்பு கொழும்பு மாவட்டத்திலேயே அதிகமாகக் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் இந்த மாதத்தில் மாத்திரம் 700க்கும் அதிகமானவர்கள் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல், இந்த மாதம் வரையில் 3 ஆயிரத்து 784 பேர் டெங்கு நோயினால் பாதிப்படைந்துள்ளனர். தற்போது பெய்து வருகின்ற அதிக மழைவீழ்ச்சியும், டெங்கு நோய்ப் பெருக்கத்துக்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடன் கூடிய கால நிலையின் போது, டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகும் பிரதேசங்கள் அதிகரிப்பதாகவும், டெங்கு நோய் பரவல் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



## ஐ.நா.வுக்கு எதிராக....

வகுத்துக்கொள்ளும் முயற்சியில் இந்திய இராஜதந்திரிகள் இறங்கியுள்ளனர்.

இதற்கிடையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் தயாரிக்கப் பட்ட அறிக்கையை இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் வழங்கியுள்ளது.

இந் நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து அவ்வறிக்கை தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து உரிய ஆலோசனை வழங்குமாறு கோரியே இவ்வறிக்கை இலங்கை அரசாங்கத்தால் இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக லக்பிம எனும் கொழும்பு ஊடகம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. இவ் வறிக்கையை ஆராய்ந்து ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான குழு ஒன்றை இந்தியா நியமித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் இவ்வறிக்கை குறித்து சில தினங்களுக்கு முன்னர் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதாகவும், இதனை அடுத்தே நிபுணர்கள் குழுவின் அறிக்கை இந்தியாவிடம் கையளிக்கப்பட்டதாகவும் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நிபுணர்கள் குழுவின் அறி[illegible]கையை ஆராயும் இந்திய அதிகாரிகள் குழு தேவைப்படும் தருணத்தில் இந் நெருக்கடியில் இருந்து மீள்வதற்குத் தேவையான உத[illegible]களையும், ஆலோசனைகளையும் கொழும்புக்கு வழங்கும் என[illegible] இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக லக்பிம தனது செ[illegible] குறிப்பில் தெரிவித்துள்ளது. அதேவேளை, ஐக்கிய நாடுகள் ச[illegible] நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் இந்தியா இதுவரை வெளிப்படையாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

இந் நிலையில், ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டாம் எ[illegible] செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்திருந்தார்.அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை விவாதத்திற்கு எடுக்கப்பட்டு, கொழும்புக்கு எதிராக தீர்மானம் எதுவும் கொண்டு வரப்பட்டால் வீட்டோ அதிகாரம் மூலம் அதைத் தோற்கடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், கொழும்பு, சீனாவுக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதை அறவே விரும்பாத இந்தியா, இந் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் எத்தகைய ஆலோசனைகளை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் என்பது அதன் வெளிவிவகாரக் கொள்ளையிலேயே தங்கியிருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா. பாதுகாப்பு...

இரண்டு நாடுகளும், தற்காலிக உறுப்புரிமை கொண்ட இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளன. ரஷ்யா மற்றும் சீனா ஆகியனவே வீட்டோ அதிகாரம் கொண்ட நாடுகளாகும். அத்துடன் இந்தியா மற்றும் போர்த்துக்கல் ஆகிய தற்காலிக உறுப்புரிமை கொண்ட இரண்டு நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துள்ளன.

பாதுகாப்புச் சபையின் மொத்த உறுப்பினர் நாடுகளான பதினைந்து நாடுகளில் ஐந்து நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்டவையாகும். மேலும் பத்து நாடுகள் இரண்டு வருட உறுப்புரிமை அடிப்படையில் தற்காலிகமாக சுழற்சி முறையில் இணைத்துக் கொள்ளப்படும் நாடுகளாகும். பாதுகாப்புச் சபையில் ஒரு நாட்டுக்கு எதிரான பிரேரணையொன்று நிறைவேற சாதாரண பெரும்பான்மை இருந்தாலே போதுமானது. ஆயினும் வீட்டோ அதிகாரமுள்ள ஒரு நாடாயினும் அதனை எதிர்க்கும் பட்சத்தில் பிரஸ்தாப பிரேரணை செல்லுபடியற்றதாகி விடும். அந்த வகையில் ரஷ்யா மற்றும் சீனா ஆகியவற்றின் ஆதரவை நம்பியே அரசாங்கம் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக நம்பப்படுகின்றது.

## சாய்பாபா முத்தி....

சாய்பாபாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக 2 நாட்கள் வைக்கப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்று சாய்பாபா அறக்கட்டளை நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். இவரின் மறைவுக்கு இந்தியாவின் அரசியல் தலைவர்கள் மற்றும் சினிமா கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், உலகின் மிகச் சிறந்த ஆன்மீகத் தலைவர், சமூக சேவகரை இழந்தது இந்தியாவுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் தனது இரங்கல் கடிதத்தில், மறைந்த சத்ய சாய்பாபாவின் ஆன்மீக அறிவை ஆழமாக புரிந்து கொண்டவன் நான். சத்ய சாய்பாபா உலகிலிருக்கும் பல கோடி மக்களின் ஆன்மீக தலைவர். ஒழுக்கமான அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு வழிகாட்டியவர். அவருடைய போதனைகள் உண்மை, அமைதி, அன்பு, அகிம்சை போன்றவற்றை வலியுறுத்துவதாக இருந்தன. பிரசாந்தி நிலையத்தை தலைமையிடமாகக் கொண்டு கல்வி, மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கும் பல்வேறு நிறுவனங்கள் மூலமும் பல உதவிகளை செய்து வந்தார். ஒவ்வொரு மனிதருடைய கடமையானது அனைவரின் வாழ்க்கைக்கு தேவையானவற்றை நிறைவு செய்வதாகும் என்று நம்பினார். அவருடைய மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவருடைய சீடர்களுக்கும், பக்தர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(இவர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் 8 ஆம் பக்கத்தில்)

## தெற்காசியாவில்....

சைபர் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கு ஏனைய உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல், தடுப்பு வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், புதிய சட்டங்களை உருவாக்குதல் உள்ளிட்ட விடயங்கள் இந்தக் கருத்தரங்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தரத்தில் சைபர் குற்றச் செயல்களை முறியடிப்பதற்கான முனைப்புக்கள் எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கொய்யாத்...

பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஆனைக்கோட்டை 3ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வீதியால் சென்ற இளைஞன் மீது உந்துருளியில் வந்தவர்கள் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில், வே.தயாபரன் (வயது 28) என்பவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (72)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**கீழே காணப்படும் வினாக்களுக்குரிய விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

32. △ + □ - ○ = 5

□ = 8, ○ = 12 எனின், △ இன் பெறுமதி யாது?.................................

33. □ - ○ - △ = 10

□ = 50, △ = 15 எனின், ○ இன் பெறுமதி யாது?.................................

34. என்னிடமுள்ள பணம் ரூபா 15 ஆகும். தம்பியிடம் உள்ள பணம் ரூபா 7 ஆகும். என்னிடமும் தம்பியிடமும் உள்ள பணத்தொகைகள் சமனாவதற்கு நான் தம்பியிடம் எவ்வளவைக் கொடுக்க வேண்டும்?
1. ரூபா 8    2. ரூபா 4    3. ரூபா 11

**பின்வரும் அட்டவணையை அவதானித்து வினாக்களுக்குரிய விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

பழக்கடைக்குச் சென்ற நான்கு பேர் வாங்கிய பழங்களின் தொகைகள் குறியீட்டில் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறியீட்டுக்குரிய பெறுமதிகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

↑ = 5    ↓ = 10    → = 15    ← = 20

| பெயர் | பழங்களும் அவற்றின் எண்ணிக்கையும் | | |
|---|---|---|---|
| | மாம்பழம் | அப்பிள் | அன்னாசி |
| கமலம் | → | ↑ | → |
| ஈஸ்வரி | ← | → | → |
| வசந்தி | ↑ | ↓ | ↑ |
| ஜனனி | ← | ↑ | ↓ |
| பானுஷா | → | ↑ | ↑ |

35. ஈஸ்வரி வாங்கிய அப்பிள் எத்தனை?
1. 5    2. 10    3. 15    4. 20

36. மொத்தமாக 20 பழங்கள் வாங்கியவர் யார்?
1. கமலம்    2. ஈஸ்வரி    3. வசந்தி    4. பானுஷா

37. இவர்களுள் கூடுதலாகப் பழங்கள் வாங்கியவர் யார்?
1. ஜனனி    2. வசந்தி    3. ஈஸ்வரி    4. கமலம்

38. ஒரே அளவான பழங்கள் வாங்கியவர்கள் யாவர்?
1. கமலமும், வசந்தியும்    2. ஜனனியும், ஈஸ்வரியும்
3. பானுஷாவும், கமலமும்    4. கமலமும், ஜனனியும்

39. ஐவரும் மொத்தமாக வாங்கிய பழங்களின் எண்ணிக்கை?
1. 150    2. 160    3. 165    4. 170

40. நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.
1. 10015    2. 100015    3. 1500000





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - I

நேரம் -45 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 11



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.


**முதலில் உள்ள இரண்டு சொற்களுக்கு இடையிலான தொடர்பை விளக்கி அடுத்துவரும் சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. விளக்கு - வெளிச்சம் | கல்வி - |
1. பணம்    2. அறிவு    3. புத்தகம்    4. தாவரம்

02. வீடு - அத்திவாரம் | மரம் - |
1. வேர்    2. கிளை    3. பூ    4. தாவரம்

**கீழே காணப்படும் உருவை அவதானித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

நீலநிற மலர்கள் →



← வாசமுள்ள மலர்கள்

03. இங்கு காட்டப்பட்டுள்ள நீல மலர்கள் எத்தனை?

.................................................................................................

04. அங்கு காட்டப்பட்டுள்ள வாசமலர்கள் எத்தனை?

.................................................................................................

05. என்னிடம் நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறமுடைய இனிப்புக்கள் இருந்தன. தம்பியிடம் கறுப்பு, மஞ்சள், பச்சை ஆகிய இனிப்புகள் இருந்தன. தங்கையிடம் வெள்ளை, மஞ்சள், ஊதா ஆகிய நிற இனிப்புகள் இருந்தன எனின் எந்த நிறமுடைய இனிப்பு மூவரிடமும் இருந்தது?

.................................................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

06. பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது.
1. சாரதி-பயணிகள்-பிச்சைக்காரர்கள்    2. நடத்துநர்-சாரதி-இசை    3. ஆசனங்கள்-சாரதி-நடத்துநர்

07. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
1. கப்பல், பயணிகள், பிச்சைக்காரர்கள்    2. மீன், மீனவர், கரை    3. நீர், அலை, மீன்

08. பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A நித்திரைவிட்டெழுதல்    B.........................................    C.........................................
D.........................................    E வீட்டிலிருந்து புறப்படுதல்

1. A உடை அணிதல்
 B முகம் கழுவுதல்
 C உணவு உண்ணல்

2. A உணவு உண்ணல்
 B முகம் கழுவுதல்
 C உடை அணிதல்

3. A முகம் கழுவுதல்
 B உடை அணிதல்
 C உணவு உண்ணல்

**கீழே ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் சொற்களின் எழுத்துக் கோலத்தை விளங்கி வெற்றுக் கூண்டுக்குப் பொருத்தமான சொல்லைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

09. | வெண்பா | - | பாம்பு | - |   | - | யன்னல் |
1. புதிர்    2. புதிய    3. புடவை    4. யானை

10. | மரல | - | ரமல | - |   | - | மரல |
1. மரல    2. ரமல    3. லமர    4. லரம

**சரியான தொடர்பில் அமைந்த விடையின் கீழ் கீறிடுக.**

11. 25, 50, 60, 75 ஆண்டுகளின் பூர்த்தியின்போது கொண்டாடப்படும் விழாக்கள் முறையே
    1. பொன்விழா, வெள்ளிவிழா, பவளவிழா, அமுதவிழா
    2. வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழா
    3. வெள்ளிவிழா, மணிவிழா, பொன்விழா, வைரவிழா

12. ஐம்புலன்களைக் குறிப்பது.
    1. மெய், வாய், கண், மூக்கு, செவி
    2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
    3. ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இவை கருத்தற்றவை என விளக்குக.**

13. எனது அண்ணா பிறந்தபோது அம்மா எனக்குப் புதிய சட்டை ஒன்று வாங்கித் தந்ததாக அப்பா என்னிடம் கூறினார்.

.......................................................................................................................

14. இன்ஷிறா முக்கோணத்தின் நான்கு முகங்களுக்கும் நிறம் தீட்டியதாகக் கூறினாள்.

**சரியான விடையை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

மஸ்றுபாவை விட குமைறா 10 வருடங்கள் இளையவள். நிம்றானை விட அப்துல்லா 5 வருடங்கள் மூத்தவர். குமைறாவும், அப்துல்லாவும் ஒரே வயதினர். குறைமாவின் வயது 15 ஆகும்.

15. இவர்களில் மிகவும் இளையவர்
    1. மஸ்றுபா 2. குமைறா 3. நிம்றான் 4. அப்துல்லா


16. மஸ்றுபா, நிம்றான் என்போருக்கு இடையே உள்ள வயது வித்தியாசம்.
    1. 15 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 5 வருடங்கள் 4. 20 வருடங்கள்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

17. நான் எனது தங்கையிடம் 8 நாணயக் குற்றிகள் கொடுத்துவிட்டு ஒரு காசுத்தாளை வாங்கிக் கொண்டேன் எனின், நான் கொடுத்த நாணயக் குற்றிகள்.
    1. 1/= நாணயம் 2/=, 2/= நாணயம் 3/=, 5/= நாணயம் 3/=
    2. 5/= நாணயம் 3/=, 2/= நாணயம் 2/=, 1/= நாணயம் 2/=
    3. 2/= நாணயம் 4/=, 5/= நாணயம் 2/=, 1/= நாணயம் 2/=

18. இரு வாகனங்கள் ஒரே நேரத்தில் A என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ஒன்றுக்கொன்று எதிர்த் திசையில் சென்றன. ஒரு வாகனம் மணிக்கு 40 கிலோமீற்றர் மாறா வேகத்தில் சென்றது. மற்றைய வாகனம் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் சென்றது. 30 நிமிடத்தின் பின் இரு வாகனத்திற்கும் இடையிலான தூரம்.
    1. 70 கிலோமீற்றர் 2. 10 கிலோமீற்றர் 3. 35 கிலோமீற்றர்

19. கீழே தரப்பட்டுள்ள உருவின் மடிப்புக்களை மடித்து ஆக்கக் கூடிய கட்டை எது?




**தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு 20, 21 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

அப்பாவின் வயதைவிட அம்மாவின் வயது 8 வருடங்கள் குறைவாகும். எனது வயதைவிட அப்பாவின் வயது 30 வருடங்கள் அதிகமாகும். தம்பி என்னைவிட நான்கு வருடங்கள் இளையவன். தம்பியின் வயது 8 வருடங்கள் எனின்

20. அம்மாவின் வயது என்ன?
    1. 8 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 34 வருடங்கள் 4. 42 வருடங்கள்





21. எனக்கும் அம்மாவிற்கும் இடையில் எத்தனை வருட இடைவெளி காணப்படுகின்றது?
    1. 8 வருடங்கள் 2. 30 வருடங்கள் 3. 26 வருடங்கள் 4. 22 வருடங்கள்

22. இரு எண்களின் கூட்டுத்தொகை 46. அவ்விரு எண்களுக்கும் இடையில் வித்தியாசம் 16 எனின், அவ்விரு எண்களும் எவை?
    1. 20, 26, 2. 15, 31 3. 16, 30 4. 16, 46

**ராமு ஓர் ஆண் பிள்ளை, ராமுவின் அக்காவிற்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரிகள் இருவரும் உள்ளனர்.**

23. ராமுவிற்கு இருக்கும் ஆண் சகோதரர்கள் எத்தனை பேர்?
    1. 3 2. 2 3. 1

24. ராமுவிற்கு இருக்கும் பெண் சகோதரிகள் எத்தனை பேர்?
    1. 3 2. 2 3. 1

25. 20 மீற்றர் நீளமும் 10 மீற்றர் உயரமும் உடைய சுவருக்கு 2 லீற்றர் தீந்தை தேவையெனின், 40 மீற்றர் நீளமும் 5 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குத் தேவையான தீந்தை எவ்வளவு?
    1. 3 லீற்றர் 2. 2 லீற்றர் 3. 4 லீற்றர்

**பின்வரும் விபரம் ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களைப் பற்றியது.**

☆ பழம் தரும் மரங்கள் 10 ☆ பழம் தரும் மரங்கள் அல்லாதன 20
☆ மாமரங்கள் 4 ☆ தென்னைகள் 4

26. இவ்விபரங்களுக்கு ஏற்பத் தோட்டத்தில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 30 மரங்கள் 2. 38 மரங்கள் 3. 34 மரங்கள்

27. 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 1, 8, 15, 22, 29 ஆகியன சனிக்கிழமைகளின் இந்த எண்களின் கூட்டுத் தொகை 75 ஆகும். இம்மாதத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
    1. 70 2. 71 3. 80


**28 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்து கோடிடுக.**

28. நெல் - நாற்று கத்தரி - ?
    1. மரம் 2. கன்று 3. செடி 4. வடலி

29. தென்னை - குரும்பை பனை - ?
    1. வடு 2. மூசு 3. கச்சல் 4. நுங்கு

30. ஓவியன் - சித்திரம் வரைதல் சிற்பி - ?
    1. கவி எழுதுதல்
    2. மட்பாண்டம் செய்தல்
    3. சிலை வடித்தல்
    4. தளபாடம் செய்தல்

31.




இவ்விரு உருக்குகளுள்,
    1. A மாத்திரம் சரியானது
    2. B மாத்திரம் சரியானது
    3. A,B இரண்டும் சரியானது
    4. A,B இரண்டும் பிழையானது